Registered No. M. 878

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion Science, Art and Civilization

Some Lessons from Mrs. Besant's Life.

| | | |
|---|---|---|
| தொகுதி 7 | 1916-௵ அக்டோபர்௴<br>நள௵ புரட்டாசி௴ | பகுதி 6 |

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S., பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

## பொருளடக்கம்.
## (CONTENTS)


பக்கம்

1. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. 203.
Current events—R. Rangaswamy Iyer. B. A.

2. மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையின் Some Lessons from Mrs Besant's Life.—A Rangasawmy Iyer 210

3. மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ. 220
Meerabai—R. Sreenivasa Aiyer. M. A.

4. மிகச்சிறு குழந்தைகட்கு பிரஹ்மஞானம்
—பி. குமரப்ப செட்டி 225
Theosophy for very little children
—P. Kumarappa Chetty.

5. ஆத்மபோதம்—யோகி சுந்தரராஜம் 230
Atmabodham—Yogee Sundararajam

6. ஜகத்குரு ஸ்தோத்ரம்—அ நம்மாழ்வார் 240
Jagadguru Sthothra—A Nammalwar

7. சமாசாரம்—News 241

8. புத்தக வரவு (Review of Books) 242


---


அறிமின்! தெளிமின்!

**மரணத்திற்குப்பின் ஜீவனின் கதி.**

பூர்ணசந்திரோதயம் 4-ம் தொகுதி பகுதி 3, 4, 5, 6-ல் "மரண பயம் வேண்டாம்" என்றெழுதியுள்ளதைப் படியுங்கள்.

தனிப் பிரதி அணா நான்கு ஆயினும், எல்லோரும அறிந்து கொள்ளற்பொருட்டு, மேற்கூறிய பகுதிகள் நான்கும் எட்டணாவிற்குக் கொடுக்கப்படும். சொற்பந்தான் உள்ளன. இம்மாதத்திற்குள் வாங்குகிறவர்களுக்கே இந்த விகிதப்படி கொடுக்கப்படும்.

மானேஜர், பூர்ணசந்திரோதயம்.
பிரஹ்மஞான மந்திரம், மதுரை.

227

ௐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

| | | |
|---|---|---|
| தொகுதி 7 | 1916-௵ அக்டோபர்௴<br>நள ௵ புரட்டாசி௴ | பகுதி 6 |

## தற்கால நிலைமை.

சென்னை ராஜதானியிலிருந்து பம்பாய்க்குப் போய் அவ்விடமிருந்து இந்தியன் ஸோஷல் ரிபார்மர் என்ற இந்திய ஜனசார சீர்திருத்த விஷயமாய் உழைத்துவரும் பத்திரிகையை நடாத்தி வருபவரும், பம்பாயில் நடைபெறும் சகல நன் முயற்சிகளிலும் உதவி வருபவருமான கே. நடராஜய்யருடைய குமாரத்தி மிஸ். நடராஜன் என்பார் மதராவில் சில வருஷங்களுக்குமுன் ஸ்தாபிக்கப் பெற்ற ஸ்திரீகள் கலாசாலையில் சரித்திர உதவி அத்யாபகராக நியமிக்கப் பெற்று அவ்வேலையை சென்ற செப்டம்பர்௴ 12௳ முதல் வகித்து வருகிறார் என்று அறியச் சந்தோஷம் அடைகிறோம். இவர் பம்பாய் சர்வ கலாசாலையில் பி. ஏ. விருதுபெற்றவர். ஸ்திரீகளுடைய அபிவிருத்திக்காக உழைக்க இந்திய மாது கிடைப்பது அரிது. இவ்வம்மாள் வெகுகாலம் நம் மாதர்களின் வித்யா விஷயமாய் உழைத்து நம் நாட்டின் முன்னேற்றத்துக்குக் காரணமாய் இருப்பார் என்று நம்புகிறோம். ஆங்கிலத்தில் புருஷர்களுக்கு புகட்டப்படும் வித்யா முறைபோலவே யில்லாமல் புனு ஸ்திரீகள்

சர்வ கலாசாலையின்கீழ் ஒரு புதிதான கலாசாலையை ஸ்தாபித்து அதில் உழைத்து வந்தால் இதைவிட மிகவும் பிரயோஜனகரமாயிருக்கு மாயினும், அத்தகைய கலாசாலை ஏற்படும்வரை சர்க்கார் கல்லூரிகளில் உழைத்து வருவதும், மிக்க நன்மை பயக்கத் தக்கது என்பதில் யாதொரு ஐயப்பாடில்லை.

***

கும்பகோணத்தில் நாளிது அக்டோபர் மாதம் முதல் தேதியன்று தியசாபிகல் எடியுகேஷனல் டிரஸ்டு என்ற பிரஹ்மஞான வித்யா பீடத்தினால் நடத்தப்பெறும் ஸ்ரீ ஸரஸ்வதி பாடசாலையின் வருஷோத்ஸவமும் பரிசில் அளிக்கும் திருவிழாவும் நடத்தப் பெற்றது. அவ்வமயம் மகா-௱-௱-ஸ்ரீ நாராயண ஐயர் (ஐ. ஸி. எஸ்) அவர்களின் மனைவியார் அக்கிராசனம் வகித்தார்கள். அவ்வம்மணி தன் புருஷனுடன் இங்கிலாந்து, ஐரோப்பாவில் பல தேசங்கள், இதர நாடுகள் எல்லாம் போய் சஞ்சாரம் செய்து வந்தவர். கும்பகோணத்திலேயே தன் குழந்தைப் பருவத்தைக் கழித்தவர். அதே நகரத்துச் சிறுமிகள் கொண்டாட்ட சமயத்தில் அக்கிராசனம் வகிக்கப்பெற்ற கௌரவத்தை நன்கு மதித்தும், தாம் இங்கிலாந்தில் பெண் குழந்தைகளுடைய பள்ளிக்கூடத்தில் பார்த்த அதிசயங்களைப் பற்றியும், இந்தியாவில்கூட முன் காலத்தைக் காட்டிலும் தற்காலத்தில் ஸ்திரீகள் கற்க சௌகரியங்கள் அதிகமா யிருப்பதால், சிறுமிகள் ஆங்காங்குள்ள பள்ளிகளில் பயின்று கடைசியில் மதராசிலிருக்கும் ஸ்திரீகள் கலாசாலையிலும் படித்து சர்வ கலாசாலையின் விருதுகளைப்பெற முயலவேண்டும் என்று தன் அபிப்பிராயத்தை வெளியிட்டும், இனிது பேசினர்.

***

பங்காளத்திலிருந்து வாலிபர்கள் யுத்தத்தில் சேர்ந்து தங்களுடைய ராஜ பக்தியையும் மாதிரு தேச விசுவாசத்தையும் ஒருங்கே காட்ட முன் வந்திருப்பது சகலரும்

அறிந்த விஷயம். இச்சிறுவர்களை மெச்சாதவர்கள் இலர். அவர்களில் 5-வது ஸமூகமானது லாகூர் வழியோயில் மார்க்கமாய் போகும்போது அந்த ஸ்டேஷனில் வண்டி நிற்கவும் ஸ்ரீமதி ஸாரளாதேவி என்ற உத்தமியும்பல கனவான்களும், அவ்வாலிபர்களை வரவேற்க, அவ்வுத்தமி வாலிபர்களுக்கு மாலைகளையும் சிற்றுண்டிகளையும் கொடுத்தார். பின்னர் இம்மொழிகளைக் கூறினர். "ராஜபுதனத்தில் ஜனித்த ராஜ புத்திர வீரர்களுடைய அசகாய சூரச்செயல்களின் விருத் தாந்தங்களால் எங்ஙனம் இந்து தேச சரித்திரமானது நிரம்பியுள்ளதோ, அங்ஙனமே இக்காலத்தைப்பற்றி இனி வரையப்படும் சரித்திரமும் வங்காளத்திலிருந்து யுத்தத் துக்கென்று புறப்படும் உங்களுடையவும் உங்களைப்போன்ற மற்ற சிறுவர்களுடையவும் ஒப்புயர்வற்ற அரிய வீரச் செயல்களால் நிரம்பி நிற்கும் என்று நான் நிச்சயமாயிருக்கிறேன். வங்காளத்தின் கௌரவத்தையும் ராஜ விசுவாசத்தையும் யுத்தகளத்தில் நிலைநாட்டி நம் மாதிரு பூமியின் கியாதியை உலகெல்லாம் பரவும்படி செய்யுங்கள். ஒவ்வொருவரும் விக்டோரியா கிராஸ் என்ற உயர்ந்த விருதை நம் சக்கிரவர்த்தியிடமிருந்து பெறுவீர்களாக." இத்தகைய ஆசீர்வாதத்தை அவ்வாலிபர்களுக்கு கொடுத்த அவ்வுத்தமியின் பெருமை யெவ்வளவு மெச்சத் தக்கது! இந்தியா மாதாவே உருவெடுத்து வந்ததுபோல் நின்று தன் குழந்தைகள் போன்ற அச்சிறுவர்களுக்கு ஆசிகூறிய அவ்வம்மணியின் வார்த்தைகள், சத்தியமாகவே முடியவேண்டுமென்று இறைவன் அருளுவாராக.

* * *

சென்ற சில நாள்களுக்குள் நிகழ்ந்த இம்மூன்று சங்கதிகளினின்று நம் நாட்டில் ஸ்திரீகளும் தங்களுடைய உத்தரவாதத்தை வகிக்க முன் வருகிறார்கள் என்று புலப்படுகின்றது. முன் காலத்தில் இந்தியா எய்திய பெருமைக்கு காரணம் பெருமை பொருந்திய ரிஷிகள் மட்டுமல்ல, ஆனால்

கார்கி, மைத்திரேயி, சீதை, முதலிய உத்தமிகளுமே என்பதை யொருவரும் மறக்கலாகாது.

* * *

வருஷந்தோறும் அக்டோபர்மாதம் முதல்தேதியன்று உலகம் முழுதும் ஒருபெரும் கொண்டாட்டம் நடைபெறுகின்றது. எண்ணிறந்த மானிடர்கள் தங்களிடரைக் களைந்து, இருளைநீத்து, துக்கத்தைப்போக்கி, நலம்விளைத்து ஞானம் புகட்டி, உற்சாகத்தை ஊட்டிய, ஒரு மூதாட்டியைப் போற்றுகின்றனர். மேனாட்டில் பலர் ஸ்தூல லோகத்துக்கு மேலான ஸூக்ஷ்ம லோகங்களுடைய உண்மையையும் மனிதனுடைய கோசங்களின் தத்துவங்களையும், அந்தர்முகமாகச் சென்று ஆத்மவிகாஸம் பெறும் முறையையும், கற்பித்த ஞானகுருவைப் பெரிதும் பாராட்டுகின்றனர். இந்தியாவில் பலர் மோக்ஷம் பெறுதல் ஒரு ஜீவனுடைய சொந்த லாபத்துக்குமட்டு மல்லவென்றும், தன் சகோதரர்களுடைய ஹிதத்தைச் செய்வதுதான் உண்மையான மோக்ஷம் அடையும் மார்க்கம் என்றும், உபதேசித்த உத்தமியை வழிபடுகின்றனர். முன் பல ஜன்மங்களில் தனது ஜன்ம பூமியாயதும் தனது குருநாதருடைய ஜன்ம பூமியுமான பாரத வருஷத்தின் முன்னேற்றத்தைக் கருதி ஆசார சீர்திருத்த முறையிலும், சமயமுறையிலும், சொல்லொணா உற்சாகத்துடனும், விடாமுயற்சியுடனும், உழைத்து வருவதைக்கண்ட ஒவ்வொருவரும் அந்த அம்மையின் ஆச்சரியகரமான கிருத்தியங்களைக் கண்டு வியப்படைகிறார்கள். இந்தியாவில் சாதாரணமாய் நாற்பது வயதுக்குள் மூப்பு வந்துவிடுகின்றது. ஆனால் வயது அறுபத்தொன்பது முடிந்தும் பெரியதோர் தினசரிப் பத்திரிகையையும், வாரப் பத்திரிகையையும், மாதாந்தரப் பத்திரிகைகள் பலவற்றையும், பத்திராதிபராயிருந்து நடத்துவதுடன், உள்ளூரிலும் வெளியூர்களிலும்போய் அநேகம் உபந்யாசங்கள் செய்து, போதாததற்கு மதராஸ் பார்லிமெண்டுஎன்ற ஒரு மகாசபைக்கு பிரதான மந்திரியாயிருந்து அதை நடத்துகிறதும் இன்னும் எத்தனையோ சபைகளின் முக்கிய

அங்கத்தினராயிருந்து நடத்துகிறதும், ஒரே தினத்தில் ஹைகோர்ட்டில் 11 மணிமுதல் 5 மணிவரை தானாகவே தன்னுடைய மிகவும் கடினமான சொந்த வியவகாரத்தை நடத்தி அதே சாயங்காலம் காலையிலிருந்ததைவிட அதிக உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் கொஞ்சமும் களைப்பின்றி வேறு கூட்டங்களுக்குப் போய் காரியாதிகளை நடத்துகிறதும், இடையிடையே நூற்றுக்கணக்கான கடிதங்களுக்கு தன் கைப்பட விடைகள் எழுதுகிறதும், இன்னும் சொல்லமுடியாத அநேகம் காரியங்களையும் ஒரே நபர் செய்யமுடியுமா என்று கேட்டால் நண்பர்களனைவோரும் முடியாதென்றே சாதாரணமாய்ச் சொல்வார்கள். ஆனால் நமது அக்கிராசனபதியவர்களின் ஊக்கத்தையும், சுறுசுறுப்பையும் கண் கூடாகக்கண்ட ஒவ்வொருவரும் மேற்கூறிய காரியங்களனைத்தையும் செய்யவல்லவர் ஒருவர் இருக்கிறார் என்று சொல்லுவார்கள். ஆச்சரியகரமானதும் இதரர்களால் முடியாததுமான காரியத்தைச் செய்யக்கூடிய பலமும் மனோவலிமையும், தீர்க்கமான ஆயுளும் இவருக்கு கிடைக்கும்படி எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

***

மதுரை பிரஹ்மக்ஞான சபையில் சென்ற அக்டோபர் மாதம் 1 தேதி மாலை 6 மணிக்கு மாதாஸ்ரீ அன்னிபெஸண்டம்மையாருடைய 70வது பிறந்தநாளைக் கொண்டாடப் பெரும் சபை கூடியது. பெரியவர்கள் அநேகரும் மாணாக்கர் பலரும் வந்திருந்தார்கள். மதுரை பிரஹ்மக்ஞான சபை அக்கிராசனபதியவர்களும் ஹைகோர்ட்டு வக்கீல் என். ராமசாமி ஐயரவர்களும் ஆங்கிலத்தில் நமது அம்மாளவர்களின் ஆயுளுக்குள் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களையும் ஸத்யத்தைவிட மேலான தர்மமில்லை யென்ற கொள்கையையும், அந்த ஸத்யத்தைநாடி அவர் பட்ட பாடுகளையும் எடுத்துக் கூறினார்கள். பிறகு ஹைகோர்ட்டு வக்கீல் வி. விசுவநாத ஐயர் சத்யம் பெரிதாகக் கருதி இவர் பதியிழந்து

பாலர்களே யிழந்த விஷயத்தில் அரிச்சந்திரனை உவமித்துக் கூறினர். ஸ்ரீமான் ஜினராஜதாசர் கூறியபடி நமது அம்மையாருடைய முக்கியகுணங்கள் சோம்பலின்மையும் சுயநயமின்மையும் என்று கூறினர். பிறகு வி. ராமச்சந்திர ஐயர் அவர்கள் தனக்கு கவலையும் அதைரியமும் உண்டாகும்போது இந்த அம்மாளவர்களின் படத்தைப்பார்த்து அவர்களது குணங்களைச் சிந்தனைசெய்தால் உடனே உற்சாகமும் தைரியமும் உண்டாகுவதுவழக்கமென்றும் லோகோபகாரத்திற்கென்றே தன்னுடைய ஜீவனை அர்ப்பணம்செய்வதாலல்லவோ பெரியவர்களுடைய கிருபையால் அம்மையாரவர்கள் இவ்வளவு காரியங்களைச் செய்ய முடிகிறது என்றும், வெகு அழகாகப் பேசிமுடித்தார்கள். பிறகு ஆர் ரங்கஸ்வாமி ஐயர் அவர்களும், மாணாக்கர்களுக்குப் பிரதிநிதியாக மந்திரேசுவர சர்மாவும் அவர்களுடைய அபிப்பிராயங்களையும் வெளியிட அன்று பிறந்தநாள் கொண்டாட்டம் வெகு அழகாக முடிவுபெற்றது.

* * *

இதேமாதிரி பிரஹ்மஞான கிளைச்சபைகள் தோறும் கொண்டாட்டங்கள் நடந்திருப்பதாக பத்திரிகைகள்மூலம் அறிகிறோம். இக்கொண்டாட்டங்களால் நம்மனைவர்களுடைய அன்புடன்கூடிய எண்ணமானது பறந்துபோய் அன்புக் குறைவிடமாகிய அம்மையாரவர்களை யடைந்து அவர்களுக்குச் சந்தோஷமேலீட்டையும் பலத்தையும், சௌக்கியத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. நாம் எல்லோரும் தீவிரமாகவும், ஒரேமனதாகவும் இவ்வம்மையார் நீண்டகாலம் அரோகதிடகாத்திரராக நம் பாரத வருஷத்தின் கைங்கரியத்தைச் செய்வதற்காக உழைத்துவர வேண்டும் என்று இறைஞ்சி ஈசுவரனை வேண்டினல் அவ்விண்ணப்பத்தை அவர் அனுதரவு செய்யவேமாட்டார் என்று சொல்லத்துணிவோம். மேலும் நாம் நல்லார் குணங்களை எடுத்துரைப்பதினாலேயே நம்மிட மிருக்கும் அந்தந்த

நல்ல குணங்களின் அங்குரங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கிளம்பி விருத்தியடையும் என்பதில் ஐயமில்லை. ஆகையால் எவ்வளவுக் கெவ்வளவு விமர்சையாகவும் உற்சாகமாகவும் இக்கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு சிலாக்யெம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்களுரைப்பதுவும் நன்றே
அவரோ டிணங்கி யிருப்பதுவும் நன்று.

என்பது நாம் வெகு சிறு குழந்தைகளாயிருக்கும் போது படித்த கவியாயினும் அதன் கருத்து பெரியவர்களான பொழுதும் கவனிக்கக் கூடிய உண்மையை யுடைத்து.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

---

## கல்வி.

ஆய்ந்து கொள்வார்க் கரனங்கே வெளிப்படுந்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடு
மேய்ந்த விளமதி யெட்டவல் லார்கட்கு
வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே.

வழித்துணை யாய்மருந் தாயிருந் தார் முன்
கழித்துணை யாங்கற்றி லாதவர் சிந்தை
யொழித்துணை யாமும்ப ராமுல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மை வல்லானே

296, 297—திருமந்திரம்.

---

234

## மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரினது 69-ஆம் ஆண்டின் நிறைவு.

---

நாளிது 1916ஹு அக்டோபர்மீ 1உயில் அம்மையாரவர்கள் 69-ஆம் வயது கடந்து 70-ஆம் ஆண்டில் பிரவேசிக்கின்றனர். இவ்வெழுபது வருஷங்கள் பால்ய தசையைச் சார்ந்த இருபது வருடங்கள் நீங்கலாக மற்ற 50 வருஷங்கள் பொதுஜன நலத்தை நாடிய கைங்கரியங்களால் எவ்வாறு நிரம்பி நிற்கின்றன என்பது அவர்களது சரிதையைப் படித்தவர்களாலும் அவர்களது செயல்களைக் கண்ணுற்றவர்களாலும் எளிதில் அறியத்தக்கது. அவர்கள் 1889ஹு மேமீ 10உ பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர் ஆயினர். அதற்குமுன்னர் அவர் நாஸ்திக வாதத்தை தழுவினராயினும் ஜனஸமூகங்களின் நன்மையை நாடி அதைப் பயக்கத்தக்க கைங்கரியங்களைச் செய்வதில் அவர்களது உடல் பொருள் ஆவிமுதலியதை அர்ப்பணம் செய்து தீவிரமாய்ப் பல வருஷங்களாக முயற்சித்து வந்தனர். பிரஹ்மஞான சபையில் அவர்கள் சேர்ந்த பின்னர் இடைவிடாது நடாத்திவரும் பல பிரவிர்த்திகளுக்கு அவர்களது முற்பயிற்சியும் லோகோபகாரத்தை நாடிய செயல்களும் அநுகுணமான அநுபவங்களாயின. அவர்கள் 1893ஹு நவம்பர்மீ 19உ நமது ஜன்மதேசமாகிய இந்தியாவில் முதல்முதல் வந்து சேர்ந்தனர். அதுமுதல் சென்ற 23 வருஷஙகளாக அவர்களது முயற்சிகளுடன் இத்தேசத்தில் ஜனித்து இத்தேசத்தின் நன்மையைக் கருதி, உழைத்த எத்தேசாபிமானியின் முயற்சியும் ஒப்பிடத் தகுதியற்றதென்று சொல்லத்தகும். இத்தேசத்தின்கண் அவர்கள் கொண்டிருக்கும் அபிமானமும் இந்துமதமென்ற ஸநாதன தர்மத்தில் அவர்களுக்குள்ள பக்தியும் சிரத்தையும் அம்மதத்திற்குரிய உண்மையான அந்தரங்க ஆசாரங்களிலும் கொள்கைகளிலும் அவர்களுக்கு இயற்கையாய் ஜனித்த

பற்றுதலும் அவர்கள் அடைந்திருக்கிற ஞானமும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகின்றன.

அவர்கள் இந்தியாவிற்கு வந்தபிறகு, இடைவிடாமல் இந்து தேசத்திற்கு பலவழிகளில் கைங்கரியம் புரிந்து இந்தியர்கள் மேன்மையை அடைவதற்கு புத்தியினாலும் அன்பினாலும் செய்கையாலும் சோர்வின்றி உழைத்து வந்திருக்கின்றனர். புனர்ஜன்மம் என்ற தத்துவத்தை அறிந்தவர்களுக்கு இதைத் தெரிந்துகொள்வது சுலபம். பல ஜன்மங்களாய் இந்ததேசத்தில் ஆரிய வம்சத்தில் பிறந்து ஸநாதன தர்மத்தின் தத்துவங்களையும் கொள்கைகளையும் பலகால் அநுபவ முறையாய்த் தெரிந்து நடுவில் சிற்சில சமயங்களில் மேற்றிசையோர்களுக்குள் சில காரணங்களைக் கொண்டு ஜன்மமெடுத்த நம்மம்மையார் இத்தேசத்தை மாத்ரு பூமியாகக் கைக்கொள்ளுதல் அரிதோ? திரிலோகங்களாகிய பூர்புவர்ஸுவர்லோகங்களின் அனுபவங்களை அறியத்தக்கவாறு அவ்வுலகங்களின் பிரகிருதிகளால் அமைக்கப்பட்ட சரீரங்களாகிய அன்னமய பிராணமய மனோமய கோசங்கள் ஒவ்வொருஜன்மத்திலும் திரிலோகியாகியஜீவன் நூதனமாக அடைகிறான். அவனுடைய கர்ம பிராப்திக்குத்தக்கவாறு வெவ்வேறு தேசங்களில் பிறக்கிறபடியால் அவன் அபிமானிக்கிற தேசமும் ஜன்மத்திற்குத் தக்கவாறு மாறுகின்றது. ஜீவனானவன் பலமுறை ஒரு தேசத்திலே ஜன்மம் எடுத்தால் அக்காரணத்தால் அத்தேசத்தினுடைய அபிவிருத்தியில் அவனுடைய சிரத்தையும் ஊக்கமும் அதிகரித்து தேசாபிமானமும் திடமாகவும் ஆழமாகவும் வேரூன்றி அதற்கு உலகத்தில் கைவிட அரிதாகிய சரீரசௌக்கியம், தனம், பன்ஸந்துஷ்டி என்ற உடல் பொருள் ஆவி முதலியவைகளை யாதொரு சிரமமுமன்றி ஆனந்தத்துடன் அர்ப்பணம் செய்கின்றான். ஒரு ஜீவனானவன் விகாஸ முறையில் மேல்நோக்கிச் சென்று ஜன்மாந்தரங்களில் ஏற்படக்கூடிய ஸ்வர்க்கானுபவம் தனக்கு வேண்டியதில்லை யெ

ன்று அதைத் துறந்து இதர ஜீவர்களுக்கு உதவி புரிவதை யே முக்கிய நோக்கமாகக் கைக்கொண்டால் அவனுடைய சங்கற்பத்தை கர்ம தேவதைகளும் அங்கீகாரம் செய்து அவன் ஒரு ஜன்மத்திற்குப் பிறகு புவர்லோகத்திற்புகுந்து ஸ்வர்க்கம் செல்லுமுன் மறுபடியும் இப்புவியில் ஜன்மமெ டுக்கத்தக்கவாறு அவனுடைய கர்மத்திற்கும் விகாஸ அள விற்கும் ஏற்ற தேசத்திலும் ஜாதியிலும் குலத்திலும் குடும் பத்திலும் அவன் பிறக்கத்தக்க ஏற்பாட்டை அக்கர்ம தே வதைகளும் செய்கிறார்கள். அம்மையாரவர்கள் வெளியிட் டிருக்கிற பிரகாரம் அவருடைய ஸ்தூலசரீரமானது ஆங்கி லேயே சரீரமாயிருப்பினும் அவருடைய அந்தராத்மாவா னது இந்திய சுபாவத்தைத் தழுவியது. அவருடைய முந்திய ஜன்மமானது இந்தத் தேசத்தில் எடுக்கப்பட்டது. அச்சரீரத்தை துறந்த சில வருஷங்களுக்குள் இங்கிலாந்து தேசத்தில் பிறந்து இப்பிரகிருத ஆங்கிலேய சரீரத்தைக் கைக்கொண்டதால் அன்னமய கோசமும் பிராணமய கோசமும் மட்டில் நூதனமாய் இந்த ஜன்மத்தில் தரிக்கப் பட்டனவேயொழிய மனோமய கோசமென்ற புவர்ஸ்வர்க்க லோக பிரகிருதியால் அமைக்கப்பட்ட சரீரங்கள் போன ஜன்மத்தில் தரிக்கப்பட்டவைகளாகவே யிருக்கின்றன. ஆகையால் அவர்கள் பிரஹ்மஞான சபையின் அங்கத்தின ராகச் சேருமுன்னமேயே இந்த தேசசப்பந்தமான பொது விஷயங்களைப்பற்றி படித்தும் பேசியும் எழுதியும் இந்த தேச அபிவிருத்தியைக் கவனித்து வந்தனர்.

இத்தேசத்தில் அவர்கள் முதன்முதல் வந்தவுடனே இத்தேசத்தில் ஜனித்தவர்கள்போல இத்தேசாபி விருத்தி யில் அளவிறந்த மனக்கிளர்ச்சியையும் உற்சாகத்தையும் அடைந்து இந்துக்களோடு நெருங்கிய சகவாஸம்செய்து பல மார்க்கங்களில் அவர்களுடைய சக்தியையும் விடா முயற்சியையும் உபயோகிக்க ஆரம்பித்தனர். இந்துமதத் தின் தத்துவார்த்தங்களை பிரசங்கங்கள் மூலமாயும் கிரந்

தங்கள் மூலமாயும், நவீனகல்விச்சாலைகளில்படித்து நவீன முறைகளால் ஐம்புலன்கள் வாயிலாகவரும் அனுபவங்களை முக்கியமாகக் கைக்கொண்ட பௌதிக சாஸ்திரங்களைக் கற்ற மனோநிலை யுள்ளவர்களும் தெளிவாக அறியுமாறு வெளியிட்டுவந்தனர். அவ்விதமாக நம்மவர்கள் தங்களுடைய முன்னோர்களால தழுவப்பட்ட கொள்கைகளிலும் ஆசாரங்களிலும் உதாஸீனர்களாய் இல்லாமற் செய்தும் பச்சிம தேசத்தார்களால் கைக்கொள்ளப்பட்ட வித்தை நாகரிகம் முதலியனமட்டும் மேம்பாடு உள்ளவைகள் என்றும், இந்துக்களின் முன்னோர்கள் அவர்களைக் காட்டிலும் நாகரிக நிலையில் தணிந்தவர்கள் என்றும் அதற்குமுன் நாம் கைக்கொண்ட விபரீதபுத்தியை அகற்றியும் ஸநாதனதர்மத்தை ஏற்படுத்திய மதஸ்தாபகர்கள் விகாஸமுறையில் உன்னதமான பதவியை அடைந்த மகரிஷிகளென்ற மகாத்மாக்களென்றும், அவர்களை பிரத்தியக்ஷமாய் அடைவது முன் காலங்களிற்போல இக்கலியுகத்திலும் சாத்தியமென்றும், இந்து தத்துவ சாஸ்திரங்கள்பச்சிமதேசத்தார்களால் பிரசுரிக்கப்பட்ட நவீன சாஸ்திரங்களின் மேலான தத்துவங்களுக்கு ஒற்றுமையுள்ளனவென்றும், இமோத்பர்வதம் முதல் கன்னியாகுமரி வரையிலும் மேற்கில் சிந்துமுதல் கிழக்கில் பர்மாதேசம் வரையில் பத்திரிகைகள் வாயிலாகவும் சஞ்சிகைகள் கிரந்தங்கள் மூலமாகவும் புஸ்தகங்கள் பிரஸங்கங்கள் வழியாகவும் அன்னிபெஸண்டு அம்மையாரவர்களால் வற்புறுத்தப்பட்டு இந்துக்களும் தங்களுடைய பூர்வீகமும் மற்றஜாதிபோருடைய பூர்வீகத்திற்கு குறைவு உள்ளதல்லவென்றும் தங்களுடைய முன்னோர்களுடைய நாகரீகமும் பயிற்சியும் மற்ற ஜாதியோர்களுடைய நாகரீகத்திலும் பயிற்சியிலும் கீழ்ப்பட்டன வல்லவென்றும் தெரிந்துகொண்டு அந்த உற்சாகத்தினால் முன்கால கௌரவத்தை நினைத்துக்கொண்டு ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிப்போகாமல் தங்களுடைய முன்னோர்களைக் காட்டிலும் மேலான

ஸ்தானத்தையடைய தற்கால முயற்சிகளை கைக்கொள்ள அந்த உற்சாகமே காரணமாகும்படி எடுத்துக்காட்டி வந்தனர்.

இந்தியாவில் அம்மையாரவர்களின் நானாவித பிரவிர்த்திகளை ஆரம்பிக்குமுன்னர் அவர்கள் அவைகளுக்கு ஆதாரபூதமான மதாபிமானத்தை நிலைநிறுத்தினர். உண்மையானதும் மேன்மையானதுமான மதாபிமானத்தால் ஒழுக்கம், சீலம், பிறர்நலம்பேணுதல், வாய்மை, தெய்வபக்தி, ராஜவிசுவாசம், சிரத்தைமுதலிய நற்குணங்கள் அவ்வபிமானத்தைக் கொள்ளுவோரிடத்தில் வளர்கின்றன. இக்குணங்கள்தான் இவ்வுலகத்திலும் மறு உலகங்களிலும் மேன்மையைத் தருகின்றன. இவ்விதமான மேம்பாடுடைய மதாபிமானத்தினின்றும் இதரமத துவேஷத்தைக் கைக்கொண்ட சுயமதப்பற்று என்ற மூடபக்தியானது வேறாகும். அதினால் துன்பமும் அக்ஞானமும் அதிகரிக்கும் என்பதைத் தவிர வேறுபலன் கிடையாது. இவ்வாறு சிலவருஷங்கள் உழைத்தபிறகு இந்து வாலிபர்களுடைய வித்தியாபிவிருத்தியைக் கைக்கொண்டனர். Secular Education என்ற, மதப்பயிற்சியைத் துறந்த லௌகிக கல்விப்பயிற்சியினால் இந்தியாவிற்கு நேர்ந்த கெடுதலை எடுத்துக்காட்டி மதப்பயிற்சியுடன் சேர்ந்த வித்தையை மாணாக்கர்களுக்குப் புகட்டுவதற்காக காசியில் பிரதான இந்து காலேஜ் என்ற (Central Hindu College) வித்யாசாலையை ஸ்தாபித்தனர். இந்துமதமென்ற ஸநாதன தர்மம் அநேகமாயிரம் வருஷங்களுக்குமுன்னர் ரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டு அவர்களால் பற்பல காலங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டு வந்திருப்பதால், காலதர்மத்தால் அநேக பிரிவுகளும் உட்பிரிவுகளும் அம்மதஸ்தர்களுக்குள் ஏற்பட்டு தோஷமான விபரீதக்கொள்கைகளும் பல பிரிவினர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்தன. இந்துக்களுள்ளேயே மத்தியகாலங்களில் தோன்றி கொண்டாடப்பட்ட மததுவேஷமும் வித்தியாஸமும் இதர மதஸ்தர்களுக்கும் இந்துக்களுக்கும் நேர்ந்த

துவேஷ வித்தியாஸங்களைக் காட்டிலும் தீவ்ரமாயிருந்து வந்தது. அவைகளை தற்காலத்திலும் சிறுபான்மை காணலாம். ஸநாதன தர்மமென்ற இந்து மதத்திற்கு பிரதானமான தத்துவங்கள், ஆதாரங்கள், கொள்கைகள், ஆசாரங்கள் என்னவென்று சொல்லவொண்ணாது என்று பல இந்துக்கள் நினைத்திருந்தனர். நெடுநாளாக போர்புரிந்து ஒருவருக்கொருவர் துவேஷத்தைக் காட்டி ஐக்கியமின்றி வாழ்ந்துவந்த பல வகுப்பினையுடைய 20 கோடி இந்துக்களுடைய பொது மதக்கொள்கைகளை கோமடீகரிப்பது அசாத்தியமென்று பலர் சொன்னார்கள். ஆனால் காசி பிரதான இந்து கல்விச்சாலை சங்கத்தாரும் அதின் தலைவராகிய அன்னிபெஸண்டு அம்மையாரும் அந்த சிரம ஸாத்தியமான காரியத்தை முடித்தனர். இந்து ஸநாதன தர்மத்தை விளக்குகின்ற கிரந்தங்களே அவர்களுடைய முயற்சிகளின் பலனும். இதுவே இந்துக்களுக்கும் இந்து மதஸ்தர்களுக்கும் செய்யப்பட்ட அரிய கைங்கரியமாகும். இதுவே சின்னபின்னமாய் சிதறப்பட்ட இந்து ஜாதியாரை ஒருங்கு சேர்க்கத்தக்க ஸாதனமாயிற்று.

காசி பிரதான கல்விச்சாலையானது சுமார் 15வருடங்களுக்குமேற்பட்ட காலமாக அன்னிபெஸண்டு அம்மையாரவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் உயர்வான ஸ்திதிக்குக் கொண்டுவரப்பட்டு ஹிந்து யூநிவேர்ஸிடி என்ற சர்வ கலாசாலையை ஸ்தாபிப்பதற்கு முக்கிய ஆதாரமாயிற்று அக்கல்விச்சாலை யில்லாவிடில் இந்து சர்வ கலாசாலையின் ஸ்தாபனம் தாமஸமாவதுமல்லாமல் அத்தாபனத்திற்குத் தடையாக இடையூறுகளும் உண்டாகக்கூடியன. இந்து சர்வ கலாசாலை அங்கத்தினர்கள் ஜனனம் முதல் இந்துக்களாயிருக்கவேண்டுமென்ற விதிக்கு விலக்காக அம்மையாரவர்களின் பேருதவியைக் கருதி, அவர்களும் ஒரு அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

இந்துக்களென்ற ஜன ஸமூகத்தில் ஸங்கியையில் ஆறில் ஒரு பாகமாகிய பஞ்சமர்களின் நிலைமையினால் இந்துக்களுடைய நிலைமையும் தாழ்மையை அடைந்து நிற்கின்றது. ஒரு சரீரத்தில் எல்லா அவயவங்களும் சௌக்கியமாய் நின்றால்மட்டும் அச்சரீரம் சௌக்கியத்தை அடையத் தக்கது. இந்துக்களில் கீழான ஜாதியோர்கள் அஞ்ஞானத்தாலும் ஆரோக்கியமற்ற ஜீவனத்தாலும் வருந்தி வந்தால் அதின் பலனை எல்லா இந்துக்களும் அடையத்தக்கதென்ற உண்மையைக் கைக்கொண்டு பஞ்சமர்களை அறிவிலும் ஆரோக்கியத்திலும் உயர்த்தக் கருதி அதற்குத்தக்க பள்ளிக்கூடங்களை நடத்தி பல பிரவிர்த்திகளையும் செய்து வருகின்றனர்.

இந்தியாவின் வருங்கால நிலைமை தற்காலத்தில் பள்ளிகளில் கற்கும் இந்து வாலிபர்களின் பயிற்சியின் பிரகாரம் அவரவர்களுடைய குணாதிசயங்கள் எவ்விதம் மேன்மையாக விகஸிக்கின்றனவோ அவ்விதம் மாறுபாட்டை அடையத்தக்கனவாகையால் அப்பயிற்சியைராஜவிசுவாசத்திற்கும் பொதுஜனகைங்கரியத்திற்கும் உத்தமமான தேசாபிமானத்திற்கும் ஒத்ததாகச் செய்யக்கருதி "இந்திய புத்திரர்கள்" "இந்திய புத்திரிகள்" என்ற சங்கங்களை அம்மையாரவர்கள் ஸ்தாபித்தனர். அச்சங்கங்களை ஸ்தாபித்ததால் ஏற்படும் நன்மையாவது வாலிபர்கள் நல்வழியிலும் நல்லொழுக்கத்திலும் பலப்பட்டு தேசத்தை உத்தாரணம் செய்யக்கூடிய கைங்கரியங்கள் யாவற்றும் தேச நன்மைகளை ஏற்படுத்தப் பட்டிருக்கும் சட்டங்களைத் தழுவி நிற்க வேண்டியனவென்று உணர்ந்து அவர்கள் உத்தரவாதத்தை வகித்து தேச க்ஷேமகரமான காரியங்களில் பிரவேசிக்கத்தக்க வயதை அடைந்தபிறகு சட்ட சம்மதமான வழிகளில் நின்று அதற்குரிய முயற்சிகளைச் செய்யக் கருதுவதேயாகும். ஏனென்றால் அப்புத்திரர்கள் புத்திரிகள் சங்கம்

ஏற்பட்ட காலத்தில் வடஇந்தியாவில் சில மாகாணங்களில் இந்திய வாலிபர்கள் சட்டவிரோதமான பிரவிர்த்திகளில் புகுந்து தேச நன்மையைச் செய்யலாமென்ற விபரீத புத்தியைக் கொண்டு அதற்கேற்றவிதமாய் செய்கைகளைச் செய்யப் புகுந்ததால் அக்கேட்டை நிவர்த்திக்க அச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அச்சங்கங்களை ஸ்தாபித்தல் நலமென்று அக்காலத்தில் இராஜப் பிரதிநிதியாயிருந்த லார்ட் மின்டோ அவர்களும் அங்கீகரித்தனர். அக்காலத்தில் சென்னை கவர்னராயிருந்தஸர் ஆர்தர் லாலி என்ற கனவானும் அச்சங்கத்திற்கு இந்த ராஜதானியில் ரக்ஷகர் என்றஆதிபத்தியத்தை வகித்தனர்.

அதற்குப் பிறகு இந்திய வாலிபர்களின் க்ஷேமத்தைக் கருதி பிரஹ்மஞான வித்பா தர்மம் என்ற தியஸாபிகல் எடுகேஷனல் ட்ரஸ்டு சங்கத்தை அம்மையாரவர்கள் ஸ்தாபித்தனர். இப்பொழுது வாலிபர்களுக்கு பயிற்றுவிக்கப் படும் கல்வியானது ஜீவனின் எல்லா சக்திகளையும் விகஸிக்கிறதற்கு உதவாதபடியாலும் ஒரு தலை பக்ஷமாய் சில சக்திகளை குன்றச் செய்து சில சக்திகளை விபரீத மாதிரிகளாக வளரச்செய்து வருகிறபடியாலும் இனி வருங்காலங்களில் நிகழப்போகும் நாகரிகத்தில் ஜீவர்களின் எல்லா ஆத்ம சக்திகளும் எவ்விதத்திலும் மறைவுபடாமல் வெளித்தோன்றுவது அவசியமாயிருக்கிறபடியாலும் கல்வி முறைகளிலும் கல்விகளிலும் மாறுதல்களை புகட்டவும அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவும் மேற்சொல்லிய வித்தியா தர்ம சங்கமானது ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. அச்சங்கத்தைச் சேர்ந்த கல்லூரிகளும் இந்து வாலிபர்கள் கல்விச் சாலைகளும் இந்து பெண் பாடசாலைகளும் இந்துதேசத்தில் பல இடங்களில் தற்காலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் முக்கியமானவை காசியிலும், கான்பூர் என்ற கண்ணபுரத்திலும, மதனபள்ளி, கும்பகோணம், புரோடட்டூர், மதுரை, கோயம்புத்தூர் முதலிய நகரங்களிலும் நடந்தேறி வருகின்றன.

தவிரவும் சென்னையில் வித்தியாசாலைகளில் கற்கும் இந்தியர்களின் க்ஷேமத்தைக் கருதி அவர்கள் சௌகரியமாய் வஸிப்பதற்கும் தேக ஆரோக்கியமான சிற்றுண்டிகளை உட்கொள்ளுவதற்கும் அவர்களது மனப் பயிற்சியை மேன்மையான வழிகளில் செலுத்துவதற்கும் வயதிலும் அறிவிலும் பெரியோர்களும் வாலிபர்களும் ஒருங்கு சேரத்தக்க ஆராமஸ்தானமாக Y. M. I. A. என்ற இந்திய வாலிப ஸங்கத்தை அம்மையாரவர்கள் அதிகப் பொருட் செலவின்மேல் ஸ்தாபித்திருக்கின்றனர். அச்சபையின் உபயோகத்திற்காக பெரிய கட்டிடங்களை சென்னையில் நிர்மாணம் செய்திருக்கின்றனர். இவைபோன்ற இன்னும் இந்துதேச அபிவிருத்தியை விரைவாகச் செய்யும் பல பிரவிர்த்திகளைக் கைக்கொண்டு அவைகளுக்கு அம்மையாரவர்கள் அவர்களுடைய சர்வ ஆத்ம சக்திகளையும் சரீர பலத்தையும் தனத்தையும் அர்ப்பணம் செய்துகொண்டு வருகின்றனர். இவ்வாறு முதலில் ஆத்மார்த்தமான மதாபிவிருத்தியை பலப்படுத்தி, அதற்குப்பிறகு மனோ சக்திகளைப் பலப்படுத்துகிற கல்விகளை ஒழுங்கான முறைகளால் புகட்டத்தக்க விதயாசாலைகள் மூலமாய் வித்யாபிவிருத்தியைப் பலப்படுத்தி அதற்குப்பிறகு இந்து ஜனஸமூகத்தில் அடங்கிய பஞ்சமர்கள் உள்பட எல்லா வகுப்பினர்களும் புருஷர் பெண்பாலர் முதலியோரும் ஐக்கியத்துடனும் தேக பலத்துடனும் நல்வழிகளில் செல்லத்தக்க வழிகளைக் காட்டுகின்ற ஆசார சீர்திருத்தங்களைப் பரவச் செய்து கடைசியாக இவ்வுலகத்தில் கௌரவத்தையும் மேன்மையையும் க்ஷேமத்தையும் தனத்தையும் அடையச் செய்கின்ற பொது நன்மையைக் கருதும் அதிலௌகீகமான பிரவிர்த்திகளில் பிரவேசித்தும் வந்திருக்கின்றனர். அப்போர்க்கொத்த ஞானவழியில் நின்று பக்தியுடன் கூடிய கர்மயோகத்தைக் கைக்கொண்ட அன்னிபெஸண்டு அம்மையாரவர்கள் இந்தியாவின் க்ஷேமத்தைக் கருதும்

மகரிஷியின் அனுக்கிரகத்தாலும் இந்த தேசத்தின் தேவதையின் பிரஸாதத்தாலும் தக்க சரீர பலத்துடன் இத்தேசாபிவிருத்தியைமேல் நடாத்துவதற்கு இன்னும் பல பல வருஷங்களில் அவர்களுடைய அப்தபூர்த்திகளை அவர்களும் நாமும் கொண்டாட நாம் ஈசுவரனைப் பிரார்த்திக்கின்றனம்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

---

## வாழி.

---

அக்டோபர் முதல் தேதி
அவதரித்தார் வாழியே
அன்னி பிஸண்ட் பேர்பூண்ட
அம்மையார் வாழியே
அயர்லாண்டு பெற்றெடுத்த
அரும்பிள்ளை வாழியே
அன்னை இந்தியாவிற்குத் தன்னை
அர்பித்தார் வாழியே
அனுதினமும் குருநாதன்
அடிபணிபவர் வாழியே
அகலாத ஞான சபை
அலங்கரிப்பவர் வாழியே
அகிலமெங்கும் புகழ்பெற்ற
அம்மையார் வாழியே
அனுதினமும் பிஸண்டம்மை
அரும்பதங்கள் வாழியே

ஓர் இந்திய புத்ரி.

---

244

# மீராபாய்.

---

(177-ம் பக்கத் தொடர்ச்சி)

## அங்கம் 3 களம் 2.

இடம்:—கும்பாஜி ராணுவின் அரண்மனை. காலம்:—மாலை. நாடக பாத்திரர்:—சுந்தரீபாய்.

சுந்:— (தனக்குள்) நான் சந்தேகித்தபடியே காரியம் முடிந்து விட்டதே. நான் நினைத்தபடியே அந்தக் கொலையாளிகள் கொல்லாமல் விட்டு விட்டார்களே. கொல்லாமல் விட்டதுமன்றி சமாசாரம் முழுவதையும் பகிரங்கமாக்கி விட்டுச் சென்றனர்களே. நகரம் முழுவதும் ராணுவை தூஷிக்கிற தூஷணைகளுக்குக் கணக்கே கிடையாது. எங்குபோனாலும் இதுதான் பேச்சு, இது தான் வார்த்தை. நம் அந்தப்புரத்திற் கூட இதைப் பற்றித் தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மேலும் எனக்கிப் போது மெத்தவும் பயமாயிருக்கிறது. இதெல்லாம் என்னுடைய வேலையென்று யாராவது கண்டு பிடித்துவிட்டார்களோ என்னவோ ஒன்றும் தெரியவில்லை. யாருக்காவது தெரிந்திருக்கக் கூடுமோ இது? மந்திரி ஒரு வேளை யூகித்திருப்பார். ஆனல் அவரைப் பற்றி ஒன்றும் பயப்பட வேண்டாம். அவரிப்படிப்பட்ட விஷயங்களை வெளியில் விடவேமாட்டார். வேறு யாருக்காவது தெரிந்திருக்குமோவென்கிற சந்தேகந்தான் என்னைப் பாதிக்கிறது. அந்தப்புரத்திலிருக்கும் எனது ஸபத்னிகள் கூட என்னிடத்தில் சில நாட்களாய் ஒருவாருகத்தான் பழகி வருகிறார்கள். நம்பிக்கை யில்லாத கண்களால் என்னைப் பார்க்கிறார்கள். நிஜமாகவே தான் அவர்கள் அப்படி சந்தேகிக்கிறார்களோ, அல்லது என் குற்றமுள்ள நெஞ்சம் என்னை யிப்படி நினைக்கச் செய்கிறதோ. யாரென்னைக் குறித்துச் சந்தேகப்பட்டாலும் அந்த மீரா மட்டும் என்னைப் பற்றி ஒரு கெட்ட

எண்ணமுங் கொள்ளமாட்டாள். அது நிச்சயம். ஏன், இந்த லோகததில் ஒருவரையும் குறித்துக் கெடுதலாய் நினைக்கமாட்டாள். அவள் ஸ்வபாவம் அப்படிப்பட்டது.

அந்தக் கொலையாளிகள் இந்நகரத்தை விட்டே ஓடிப் போய் விட்டார்களென்று தோன்றுகிறது. தங்களுயிரைக் காப்பாற்றிக் கொள்ள அப்படிச் செய்வதைத் தவிர வேறு மார்க்கமுண்டோ? எனக்கப்போதே தெரியும். ஒருவரும் அந்த மீராவைக் கொல்லத் துணிய மாட்டார்கள். அவளிடத்தில் அவ்வளவு வைரம் கொண்டிருக்கும் எனக்கே அவள் எதிரில் நின்றால் மனம் இளகுகிறதே, வேறே யாருக்குத் தானிளகாது? அவளிடத்தில் வெறுப் புற்றவர்கள் யாருமில்லை. கொலையாளிகளுக்குக் கூட அவள் தான் குலதெய்வம். அவள்மீது குற்றமிருந்தா லல்லவா யாராவதவளை வெறுப்பார்கள்! அவளைக் கொல்லவேண்டுமென்றுலிப்படி யெல்லாம் சாத்தியப்படாது. வேறே—

(கும்பாஜி வருகிறான்.)

நாதா! வாருங்கள். இப்படி உட்காருங்கள். என்ன விசேஷம்?

கும்.—சுந்தரீ, எனக்குப் பைத்தியம் பிடிக்கும்போலிருக்கிறது.

சுந்:— (தனக்குள்) ஏன், பிடித்தே போய் விட்டது (வெளிப்படையாக) என்ன் காரணம்?

கும்:—இந்தப் பாவியிடத்தில் என்ன மந்திரம் இருக்கிறதோ, நான் அனுப்பின கொலையாளிகளுடைய மனதைக் கலைத்து விட்டாளே. அதோடு போயிற்று? அந்தப் போக்கிரிகளெல்லாம் சமாசாரத்தையும் வெளிப்படுத்தி விட்டுத் தங்கள் குடும்பங்களுடன் இந்நாட்டை விட்டோடி விட்டார்களாம்.

சுந்.—நானப்போதே சொல்ல வில்லையா? இப்படிப் பட்ட விஷயங்களில் எல்லாம் இரண்டாவது மனுஷ்யாளை நம்பக் கூடாதென்று நான் வற்புறுத்திச் சொன்னேனே.

கும்:—ஆம் சுந்தரீ, அப்போதே அதைப் பற்றி யோசிக்காமற் போனேன். நான் அவர்களிடத்தில் மெத்தவும் நம்பிக்கை வைத்திருந்தேன். இதுவரையில் அவர்கள் இம்மாதிரி என் வார்த்தையை நிராகரித்ததே கிடையாது. இக்காரியத்தில் இப்படிச் செய்வார்களென்று நான் எப்படி நினைத்திருக்கக் கூடும்? அதென்னவோ, நான் செய்தது தவறிப் போய் விட்டது. சுந்தரீ, இனி நாம் என்ன செய்யலாம். எனக்கொன்றும் தோன்றவில்லையே.

சுந்:—அவளிடத்திலே தானே ஏதோ மருந்து மந்திரம் முதலியவைகளுண்டென்று சொன்னீர்களே. அப்படியிருந்தால் அவளை நாமென்ன செய்யமுடியும்?

கும்.—அது நானூஹித்ததே யல்லாமல் வாஸ்தவமமென்று சொல்லமுடியாது. அவளை யெப்படியாவது கொல்லவேண்டியதுதான். இல்லாவிட்டால் நான் பயித்தியம் பிடித்துப் பிராணனை விடுவேன்.

சுந்.—நாதா. இந்தமாதிரி நீங்கள் பேசினாலெனக்கு ரொம்ப வருத்தமுண்டாகிறது. இப்படியெல்லாமென் காதுகேட்க வொன்றும் நீங்கள் சொல்லலாகாது. நீங்கள் துன்பப்பட நான் பார்த்து சகிப்பேனா?

கும்.—அவளை யிப்போது கொல்லவேணும்.

சுந்.—இவ்வளவுதானே. தங்களுக்குத் தெரியாததா? ஏதாவது ஒருவழி சொல்லுங்கள்.

கும்.—எனக்கொன்றும் தோன்றவில்லை. ஒருதரம் தவறிப்போனபிறகெனக்கு யோசனை செய்யக்கூட தைரியமில்லை, நீ யேதாவதொரு யோசனை சொல்.

சுந்.—இதற்கென்ன கஷ்டம் நாதா? புஷ்பத்துக்குள் பாம்பிருக்கிறதில்லையா?

கும்.—(சந்தோஷித்து) சரியான யோசனை சுந்தரி. நல்ல நீல சர்ப்பத்தைக் கொண்டு காரியத்தை முடித்து விடுகிறேன்.

சுந்.—எப்படி?

கும்.—யாரிடத்திலாவததை யனுப்புகிறேன்.

சுந்.—அதுதானே கூடாது. ஒருதடவை பிறரை நம்பிப் பட்டது போதாதா? இன்னமும் வேறொருவரை நபம் வேண்டுமா?

கும்.—ஆமாம், அதுகூடாது. (யோசித்து) நீயே கொண்டுபோய்க் கொடு.

சுந்—நாதா, இது நியாயமா? நான் சர்ப்பத்தைக்கொண்டுபோய் மீராவுக்குக்கொடுக்கிறதா? அது நன்றாயிருக்குமா? என்னையிப்படி நீங்கள் செய்யச் சொல்லலாமா?

கும்.—வேறே ஒருவரையும் நான் நம்பமுடியாது நீதானதைக் கொண்டுபோக வேண்டும். நான் சொல்வதை மறுக்காதே.

சுந்.—ஒரு ஸ்திரீ மற்றொரு ஸ்திரீயிடத்தில் ஸர்ப்பத்தைக் கொண்டுபோய்க் கொடுக்கத் துணிவாளா? அதையெதிலாவது மறைத்திருந்தாலும் பாதகமில்லை. சர்ப்பத்தையப்படியே கொண்டுபோய்க் கொடுப்பதென்றால் யாருக்கு மனம் வரும்?

கும்.—சரி, அப்படியே செய்.—எதிலாவதொளித்துக் கொண்டுபோ.—எதிலொளிக்கலாம்? (யோசிக்கிறான்)

சுந்.—நான் முதலிலே சொல்லவில்லையா?

கும்.—ஆமாம், புஷ்பத்துக்குள் மறைத்துக்கொண்டுபோ. இரண்டு நாகங்களை யுள்ளேவைத்து ஒரு பூமாலை

யுண்டாக்கி யதைக்கொண்டுபோய் நான் ஹாரமனுப்பியிரு க்கிறதாகவும், அதைக் கழுத்தில் தரித்துக்கொள்ளும்படி நானுத்தரவளித்ததாகவும் சொல்லி யவளிடம்கொடு.

சுந்.—நான் கொண்டுபோய்க் கொடுக்கிறேன். அவள் அதைத் தரித்துக்கொள்ள மாட்டேனென்று சொல்லி விட்டால் என்ன செய்வது?

கும்:—உலகத்துக்கெல்லாம் அவள் பதிவ்ரதையல்ல வென்பது தெளிவாகிறது. அவள் அப்படி யொன்றும் சொல்லமாட்டாள்.

சுந் :—(தனக்குள்) என்ன தைரியம்? ஒரு பக்கம் மீரா விடத்தில் நம்பிக்கை, மற்றொரு பக்கம் அவளிடத்தில் வெறுப்பு (வெளிப்படையாக) சரி, நான் கொண்டு போய்க் கொடுக்கிறேன். என்றால் ஒரு தடையுங் கிடையாது.

கும்:—அப்படியானால் அம்மாலையைக் கட்ட ஏற்பாடு செய்வோம் வா. (போகிறார்கள்)

(காட்சி முடிகிறது.)

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் எம். ஏ

## மிகச்சிறு குழந்தைகளுக்கு பிரஹ்மக்ஞானம். *

---

### மூன்றாம் அத்தியாயம்.

### மரணத்திற்குப் பின் நாம் போகும் இடம்.

நேற்றுக் குழந்தை இராகவனிறந்தான். அவன் நாம் பார்க்கக் கூடாத இடத்திற்குப் போய் விட்டான். இப்பொழுது நீ அங்கே போய் அவனோடு விளையாட முடியாது. அந்தச் சிறிய இராகவன் எங்கே போயிருக்கிறான்? அதற்குக் கொஞ்ச நாளைக்கு முன் சென்ற மீனாள் எங்கே போயிருக்கிறாள் என்பது உங்களுக்குத் தெரியுமா? தாய், தகப்பன், குழந்தைகள், நீங்கள், உலகத்திலுள்ள மற்ற ஜனங்கள் ஆகிய நாம் எல்லோரும் ஒரு காலத்தில் எந்த இடத்திற்குபோவோமென்று நீங்கள் அறிவீர்களா?

உலகத்திற்கு வருகிற எல்லோரும் பிறக்கும்போது ஒரு சிறிய குழந்தைச் சரீரத்தோடு வருகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தைரியமாகவும், புத்திசாலிகளாகவும், அன்புடையராகவும் இருக்கக் கற்றுக் கொள்ளவேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். நம்முடைய வாழ் நாள் முழுவதும் நாம் கற்றுக்கொண்டே போகிறோம். போதுமானவரை நாம்படித்திருக்கிறோம், அதனால் களைப்படைந்து விட்டோமென்று கடவுள் அறியும்பொழுது அவர் நம்மைக் கொஞ்ச காலம் தன் வீட்டிற்கு அழைத்துக் கொள்ளுகிறார். கடவுளுடைய வீட்டை இப்பொழுது நம்மால் பார்க்க முடியாது. அவர் நம்மை மறுபடியும் அழைக்கும்பொழுது அவ்வழகிய வீட்டை நாம் பார்க்கலாம். இப்பொழுது நாம் அதைப் பார்ப்பதற்கு வேறு கண்களைப் பெற்றிருக்க வேண்டும். அது அவ்வளவு அழகுள்ள தாயிருக்கிறது. நாம் இப்பொழுது பெற்றிருக்கிற கண்கள் போதா இறந்தபின் பிறகு நாம் வசிக்கப்போவதாகிய அப்படிப் பட்ட அழகிய வீட்டைப் பார்ப்பதற்கு இப்போது நாம்

---

* Adapted from the "young age" London (Theosophy for very little children by C. M. Codd)

பெற்றிருக்கும் கண்கள் அவ்வளவு சுத்தமானவைகளல்ல நீ உன்னுடைய கண்களை மூடி அந்த அழகான கண்களைத் திறக்கக் கூடுமானால் அப்போது நீ அதைப் பார்ப்பாய். அவ்வீடு எவ்வளவு பிரகாசமும் மகிமையு முடையதாயிருக்கிற தென்பதை நீ அறிவாய்.

நம் எல்லோருக்கும் அப்படிப்பட்ட அழகான கண்கள் இருக்கின்றன. ஆனால் நாம் அவைகளை உபயோகப்படுத்த இன்னம் தெரிந்து கொள்ளவில்லை. அவைகளை எப்படி உபயோகப்படுத்துகிறதென்று நாம் இறந்த பிறகு கடவுள் நமக்குக் காட்டுகிறார். இவ்வுலகத்தில் வசிப்பதற்கு நம்முடையசரீரங்கள் எவ்வளவு ஏற்றனவாக இருக்கின்றனவென்பதை நீ அறிகிறாய். ஏனெனில் கடவுளால் அமைக்கப்பட்ட வீடாகிய இவ்வுலகம் மிகவும் அழகாய் இருந்தபோதிலும் அந்த வீட்டைப்போல அவ்வளவு அழகுடையதல்ல. ஆகையால் நாம் அங்கே போகும்பொழுது நம்முடைய இந்தச் சரீரத்தை இங்கேயே விட்டு விட்டுப் போய் விடுகிறோம். அப்போது கடவுளுடைய அந்த வீட்டிற்கு யோக்கியமாயுள்ள மற்றொரு அழகிய சரீரத்தில் வசிக்கிறோம்

அந்தச் சரீரமானது வசிப்பதற்கு மிகவும் நேர்த்தியானது. அதற்கு ஒருபொழுதும் களைப்பாவது, பசியாவது, குளிராவது கிடையாது. அதற்குக் குளிர் போக்க நெருப்பு வேண்டுவதில்லை. ஏனெனில் அது ஒருபொழுதும் குளிர்ச்சியை அடைகிறதில்லை. அதற்குத் துன்பமே ஏற்படுகிறதில்லை. ஒரு பக்ஷியின் சரீரத்தைப்போல வசிப்பதற்கு அவ்வளவு இலேசாகவும் எப்பொழுதும் சந்தோஷமுள்ளதாகவு மிருக்கிறது. இங்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற இராமனென்னும் நொண்டிச் சிறுவன் அங்கே போய்விடுவானானால் அவனுக்கு அது எவ்வளவு சந்தோஷமுள்ளதாக இருக்கும் என்பதை யோசித்துப் பார். நடக்கப் பழகும் பொருட்டு கோலை ஊன்றிக்கொண்டு அவன்

நகரவேண்டியதில்லை. மிகுந்த சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கக் கூடியதான புதிய சரீரத்தை அவன் அங்கு பெறுவான். அப்போது அவனால் தாண்டிக் குதிக்கவும், ஓடவும், கடற்கரை ஓரங்களிலுள்ள கடற் பக்ஷிகளைப்போல ஆகாயத்தில் பறக்கவும் முடியும். அங்குள்ள எல்லாக் குழந்தைகளும் பக்ஷிகளைப் போலப் பறக்கக் கூடும். எல்லாரும் சந்தோஷமாகக் கூடிவிளையாடுவார்கள் அழகிய தேவதூதர்களும், கந்தர்வர்களும் கூட தங்களோடு விளையாட வரமாட்டார்களாவென்று அவர்கள் சில வேளைகளில் வந்து பார்க்கிறார்கள்.

நீங்கள் ஒவ்வொரு நாளும் நித்திரை செய்யும்பொழுது அந்த அழகிய பிரதேசத்திற்குச் செல்லுகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியும். இறந்து போனபிறகு நீங்கள் போய்ச் சேருகிறதாகிய நல்ல உலகம் அதுதான். அது போன்ற இடத்திற்கு நீ இறந்த பிறகு போகிறாய். இரவில் நீங்கள் தூங்கும்பொழுது கீழ் உலகத்தைச் சேர்ந்ததாகிய இந்தச் சரீரத்தை விட்டு விடுகிறீர்கள். இறந்த பிறகு நீங்கள் வசிப்பதாகிய அந்த அழகிய சரீரத்தைக் கொள்ளுகிறீர்கள். அப்போது அவ்வுலகத்தில் வசிக்கும் குழந்தைகளோடும், அழகிய தேவதூதர்களோடும், கந்தர்வர்களோடும் நீங்கள் பேசக்கூடும். அவர்களுடன் பறந்து செல்லலாம். விடியற்காலத்தில் அவர்கள் உங்களை இவ்வுலகத்திற்குத் திரும்ப அனுப்புகிறார்கள். நீங்கள் விழித்துக்கொள்ளுகிறீர்கள்! மறுபடியும் நீங்கள் இங்கு இருக்கிறீர்கள்! ஆகையினாலே இராக் காலங்களிலும், இறந்தபிறகும் இந்த உலகத்தைக் காட்டிலும் அதிக நேர்த்தியானதும் அழகியதுமான அவருடைய உலகத்தில்கடவுள் நம்மை வசிக்கச் செய்கிறார். நாம் இவ்வுலகத்தில் விழித்துக் கொண்டிருக்கும்பொழுது அவர் நம்மை எவ்விதமாக நடக்கவேண்டுமென்று விரும்புகிறாரோ அவ்விதமாக நடக்கக் கூடுமானவரை முயற்சி செய்தோமானால் பிறகு நாம்

சித்திரையில் அவ்வுலகத்திற்குப் போகும்போது அது அதிக அழகுள்ளதாகவும் சந்தோஷ கரமான தாகவும் இருக்கும். கடவுள் விரும்புகிறபடி நடக்கப் பிரயத்தனப் படாத ஜனங்களுக்கு அந்த உலகமானது முதலில் அவ்வளவு அழகுள்ளதாகத் தோன்றுகிறதில்லை. அன்பின்மை, சுயநலம் கருதுதல், கெட்ட எண்ணங்கள், ஆகிய இச்செயல்கள் நம்முடைய அழகான கண்களை மறைத்து விடுகின்றன. அப்போது நாம் அந்த உலகத்தில் நன்ருகப் பார்க்க முடியாது. அதற்காக நாம் செய்யவேண்டுவ தென்னவெனில் சீக்கிரமாக யாராவது ஒருவரிடம் அன்பு பாராட்டி அவர்களுக்கு ஒத்தாசை செய்வது தான் வழி. அப்போது நம்முடைய கண்கள் நன்ருகப் பார்க்கும்.

அவ்வழகிய உலகத்திலுள்ள சிறந்த வஸ்துக்களைப் பற்றி நான் உங்களுக்கு எவ்வளவு சொன்னுலும் சொல்லி முடியாது. மிகுந்த மேன்மையான சங்கீதங்களைப் பாடக் கூடிய கின்னர தேவர்கள் அங்கு இருக்கின்ருர்கள். அவர்கள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்வார்களாயின் அதுவே ஒரு அழகிய சங்கீதம் வாசிப்பதைப்போலத் தோன்றும். அதிக ஆச்சரியமான வர்ணங்களை உண்டுபண்ணும் தேவர்கள் சிலர் அங்கே இருக்கிருர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும்பொழுது, சிலசமயங்கள் சூரிய அஸ்தமன காலத்தில் காணப்படும் வர்ணங்களைப் போன்ற பல விசித்திரமான வர்ணங்கள் ஆகாயமுழுவதும் பரவும். அன்றியும் இதைத்தவிர கணக்கில்லாத சிறியதேவ கன்னிகைகள் கூட்டம் கூட்டமாக இருக்கிருர்கள். ஆடுவதும், பறப்பதுமான அச்சிறிய தேவதைகள் முற்றிலும் வேடிக்கையும் விளையாட்டும் நிறைந்தவர்கள். விருக்ஷங்களிலும், பூங்கொத்துகளிலும் அங்குமிங்கும் அவர்கள் விளையாடுவதானது சூரிய கிரணங்கள் அவைகளில் பிரகாசிப்பதைப்போலிருக்கும்.

இவ்வுலகத்தில் மனிதர்கள் செய்யவேண்டுமென்று கடவுள் விரும்புவது ஐந்து விஷயங்கள்:—

முதலாவது நம்மைச் சுற்றியுள்ள ஜனங்களை நாம் நேசித்தல். இரண்டாவது இவ்வுலகத்திலுள்ளவர்களும் பெரும்பாலும் அவரைப் (கடவுளை) போன்றவர்களுமான ஜனங்களை நேசித்தல், அதாவது அவர்கள் செய்திருப்பதான தைரியமும்உண்மையுமான காரியங்களையெல்லாம் தெரிந்து கொண்டு, நாமும் அவர்களைப் போல் நடக்கப் பழகுதல். மூன்றாவது உலகத்தில் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எல்லா ஜனங்களிடமும் தாம் இன்னவிதமாக நடக்கவேண்டுமென்பது கடவுளுடைய விருப்பம் என்பதை இன்னம் அறிந்து கொள்ளாத ஜனங்களிடமும் அன்பாயிருத்தல்.

நான்காவது நாம் வசிக்கிற உலகத்திலுள்ள பக்ஷிகளையும், மிருகங்களையும், புஷ்பங்களையும் இன்னும் அதிலுள்ள அழகிய சகல வஸ்துக்களையும் தேடித் தெரிந்துகொண்டு அவைகளிடம் அன்பாயிருத்தல்.

கடைசியானது உலகத்தில் எல்லாப்பொருள்களிலுள்ளும் மறைவாக வைக்கப்பட்டிருப்பதும் கடவுளுடைய அம்சமாகியதுமான எந்த வஸ்துவுண்டோ, அதைத் தேடிப் பிடிக்க விரும்புவது.

அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டதும், அவரால் வைக்கப்பட்டிருப்பதுமான அவருடைய ஒரு சிறுபாகமானது உலகத்திலுள்ள சகலரும் பார்க்கும்படி பிரகாசிக்குமானால் எவ்வளவு ஆச்சரியகரமாகவும் மகிமையுள்ளதாகவும் அது இருக்குமென்பதை நீ யோசித்துப்பார்.

இருட்டைக்கண்டு நீ இனிமேல் பயப்படவே மாட்டாய், பயப்படுவாயா? நீ பயப்படுவாயானால் தூக்கத்தால்

இவ்வுலகத்தைவிட்டு அந்த அழகிய உலகத்திற்குப் போகும் வரை தாயார்வந்து உன் கையைத் தொட்டுக்கொண்டிருப்பாள். காலையில் நீ திரும்பிவந்த பிறகு உனக்கு ஞாபகமிருந்தால் நீ கண்ட விஷயங்களை அவளுக்குச் சொல்லவேண்டும். பெரும்பாலும் அவைகள் நமக்கு ஞாபகத்திற்கு வருகிறதில்லை. எனக்கு ஞாபகத்திற்கு வருகிறதா? சிலவேளைகளில்தான். அந்த அழகிய உலகத்தைப் பற்றியும், சதாகாலமும், அதாவது பகல்காலங்களில்கூட மூடாத தன் அழகிய கண்களால் உலகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற ஒரு பெரிய நல்ல மனிதனைப் பற்றியும் தாயார் உங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

சுபம்.

பி. குமரப்ப செட்டி.

---

## கேள்விகேட்டமைதல்.

---

ஈசனருளு மிறப்பும் பிறப்பையும்
பேசியிருந்து பிதற்றி மகிழ்வெய்தி,
நேசமுமாகு நிகழொளியாய் நின்ற
வாசமலர்க்கந்த மன்னி நின்றானே.

—304 திருமந்திரம்.

## கல்வி

பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது வெல்லா முதல்வ னருள்பெறில்
இற்ற விரகிற் கிளமொளி வானவர்
கற்றவர் பேரின்ப முற்று நின்றாரே

—298 திருமந்திரம்

# ஆத்மபோதம்.

---

(5-ம் தொகுதி. 416-ம் பக்கத் தொடர்ச்சி)

சச்சிதானந்த யோகீந்திரர்:—நிஷ்டை முடிந்து வருகிறார். சிஷ்ய கோடிகள் வணங்கி நிற்கிறார்கள்.

யோகி:—ஹே! சிஷ்யரத்நங்களே! நேற்று பகவான் புஷ்பத்தை ஏற்றுக்கொண்டு பக்தனை அநுக்கிரஹித்த வரலாற்றைச் சொன்னேன். அக்கதையில் ஹூஹூ என்ற கந்தர்வன் தவறி நடந்தது வாஸ்தவம். ஆகையால் அவனை தேவல மஹரிஷி சபித்தது சரி. ஆனால், ராஜா இந்திரத்யும்நன் பகவத்தியானம் செய்தது தவறாகாதே, ஆகையால் அவனை அகஸ்திய மஹரிஷி சபித்தது தவறல்லவா? என்று ஒருவாறு நீங்கள் சங்கிக்கலாம். ஆகையால் அதின் உண்மையையும் உங்களுக்கு விளங்கச் சொல்லுகிறேன் நன்றாய்க் கவனியுங்கள்.

ஹூஹூ என்ற கந்தர்வன் ஸ்வர்க்காதி போகங்களை அநுபவிக்கப் பெற்றவனே யல்லாது, ஆத்ம வித்தையைப் பயின்று ஞானத்தினால் பரமாநந்த சுகத்தை யநுபவிக்க முயற்சித்தவனல்லன். ஆகையால் அவன் தவறி நடந்ததும் சாபத்தை யடைந்ததும் சரியே. ஆனால் பரமாசாரியராகிய ஆதி சங்கரர் சொல்லிய

𑌸𑌤𑍍𑌸𑌂𑌗𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌸𑍍𑌸𑌂𑌗𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌸𑍍𑌸𑌂𑌗𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌹𑌤𑍍𑌵𑌂 । *
𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌹𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌜𑍀𑌵𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 ॥

என்ற இச் சுலோகத்தின் தாத்பரியத்திற் கேற்ப அவன் மஹா உத்தம சாதுவாகிய கஜேந்திரனைச் சேவை செய்ததின் நிமித்தம், மோக்ஷத்தையே அடைய வேண்டி

---

* இதன் அருத்தம் "சாது சங்கமிருந்தால் பற்று நீங்கும். பற்று நீங்கினால் மோஹம் நீங்கும். மோஹம் நீங்கினால் மனது அசைவற்று நிற்கும், அது பெறின் ஜீவன் முக்தி லபிக்கும்."

யிருக்க, தன்னிருப்பை யடைந்தது ஆச்சரியமாகாது. ஆனால் எவ்வளவுதான் கற்கினும், கேட்கினும் சிலமுறை யாரது ஸஹவாஸ மகிமையினால் ஸங்கம் பற்று அற்றுப் போனாலன்றி, ஆசை யொழியாது. ஆசை மிகவும் கெட்டது. அதுவே ஜனன மாணத்திற்குக் காரணமாகின்றது.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவ தறிக."

ஆகையால் விருப்பு வெறுப்புகளற்று, இந்திரியங்களை தனது மனத்திற்கு ஸ்வாதீனப்படுத்திக் கொள்கிறவன், சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மாத்திரம் விஷயங்களை அநுபவித்தபோதிலும், நிர்மலத்துவ மடைவான். ஹூஹூ என்பவன் விஷயப்பற்றோடிருந்தவனாகையால் பற்றற்ற நிலையை அடையவில்லை. ராஜா இந்திரத்யும்நனோ, தபசே செய்தானாலும் தன் குல தர்மத்தை விட்டு பரதர்மத்தைக் கைக்கொண்டவன். இது முற்றிலும் சாஸ்திர விரோதம். அடியில் காட்டியிருக்கும் கீதா சுலோகத்தின் தாத்பரியத்தைப் பார்க்க நன்கு விளங்கும்.

𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌿𑌗𑍁𑌣𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌤𑍍
𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌿𑌧𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑍋 𑌭𑌯𑌾𑌵𑌹𑌃 ॥ *

பிரஹ்ம, க்ஷத்திரிய வைசிய, சூத்திரர் என்னும் நான்கு வருணத்தவரும், தங்கள், தங்கள் குலத்திற்குரிய தொழிலைச் செய்து அதினால் வரும் பலன் எவ்வளவே யாயினும், திருப்தி யடைந்திருத்தல் வேண்டும். திருப்தி என்னும் பொருள் ஒருவனிட மிருக்குமாயின் துக்கம் என்பதே அவனை யணுகாது. அவன் எப்பொழுதும் சுகத்தி

---

* இதன் பொருள்:—நன்றாக அனுஷ்டிக்கப்பட்ட அன்னியனுடைய தர்மத்தைக் காட்டிலும் தன்னுடைய குணமற்ற ஸ்வ தர்மம் சிலாக்கியமானது. தன் தர்மத்தை யனுஷ்டித்து நாசமடைவதும் நலம். பர தர்மமோ பயங்கரமானது.

லேயே யிருப்பான். இவ்விதம் செய்யாது, மற்றோர்களு டைய தொழிலை ஒருவன் மேற்கொள்வானாயின் வரான்முறை கடந்து போவதுமன்றி பொறு மை முதலிய துர்க்குணங்கள் மேலிட்டு தனக்கு உள்ள பெருமையையும் சுகத்தையும் போக்கிக் கொள்வான். ஆகையால், இந்திரத்யும்நன் என்ற ராஜன் தான் க்ஷத் திரியனாகப் பிறந்தும், தன் ஸ்வதர்மமாகிய உலகத்தவர் களை ரக்ஷிப்பதென்ற தொழிலை விட்டு பிராஹ்மணர்களு டைய தொழிலாகிய தபஸைக் கைக்கொண்டதே, அவன் சாபத்தை யடையக் காரணம். ஆயினும் அவன் ராஜனா யிருந்தக்கால் செய்த ஸாது சங்கமே அவனை மோக்ஷ வீட் டிற் சேர்த்த தென்றறிக. ஸாது சங்கத்தின் வல்லபம் பின்னிரு செய்யுள்களால் உங்களுக்கு நன்கே விளங்கும்.

" ஓதுகின்ற பொருண் முழுது முன் பின் கூட்டி
யுணர் பவர்க்கல்லதுபசுவை யொப்பார்க் கெல்லாந்
தீதகன்ற குருவுண்மை செப்பாரன்றே
திகழ் சாந்தி விசாரமொடு செறி சந்தோடஞ்
சாது சங்கமென வீட்டின் வாயில் காக்குஞ்
சதுஷ்டயரு முறவா கிற் றடைவேருண்டோ
மேதினி கா வலர் மனையிற்-கடை காப்பாளர்
விடுவது போல் வீட்டிலவர் விடுவாரன்றே."
" அங்காவ்வர் தமிலொருவ ரன்பானாலு
மனைவருமொத் தன்பாவராத லாலே
பன்னாளு மிகமுயன்று யாது நீத்தும்
பற்றியொரு வரையேனும் பழக வேண்டு
மன்னாத பிறப்பறுக்க நல்லோர் நன்னான்
மாதவத்தா, லறிவை முதல் வளர்க்க வேண்டு
மின்னாத மாயை யெனும் நஞ்சம் போத
மென்கின்ற காருட மந்திரத்தான் மீளாய்"

தவிர அவன் பக்திக்கு பகவானே ஈடுபட்டு வந்தமை யாலும், மற்றைய தேவர்கள் தாமில்லை தாமில்லை யென்று விலகி விட்டபடியாலும்; நேரிலேயே பகவத் தரிசனம் கிடைத்தமையாலும், அவனுடைய சகல கருமங்களும்

நசித்துப்போய் அவன் மோக்ஷத்தை யடைந்தான் என்னும் விஷயம் கீழே சொல்லியிருக்கும் சுலோகத்தால் நன்கு விளங்கும்.

*நக்ராக்ராந்தே கரீந்த்ரே முகுலிதநயநே மூலம் மூலேதி கிந்நே | நாஹம் நாஹம் ந வாஹம் ந ச பவதி புந: தாத்ருசோ யாத்ருசேஷு ||

இத்யேவம் த்யக்தஹஸ்தே ஸபதி ஸுரகணே பாவசூந்யே ஸமஸ்தே | மூலம் யத் ப்ராதுராஸீத் ஸ திசது பகவாந் மங்களம் ஸந்ததம் ந: ||

த்தவ:—ஹே! தபோநிதே! இந்திரத்யும்ந னென்ற ராஜாவும், ஹூஹூ என்ற கந்தர்வனும், அவரவர்களின் பக்குவத்திற்கு தகுந்த கதியை அடைந்தார்களென்ற விஷயத்தை சந்தேகமறக் கேட்டுத் தெளிந்தோம். இனியும் பகவான் பழத்தை ஏற்றுக்கொண்டு பக்தனின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்த வரலாற்றைக் கேட்க மிக்க ஆசை கொண்டிருக்கும் எங்களை அநுக்கிரகிக்கப் பிரார்த்திக்கிறோம்.

யோகி:—பக்தியிற் சிறந்த என தருமைச் சிறுவர்களே! கேளுங்கள்.

சபரி யென்ற பெண்மணி மலைப்பளியர்களென்று சொல்லப்படும் ஜாதியில் பிறந்தவள். அவ்வம்மணி சிறு பிராயம் முதற்கொண்டே, அவர்கள் ஜாதிக்குவந்த ஜீவஹிம்ஸை யென்பதைக் கனவிலுங்கூட கருதாது "அஹிம்ஸா பரமோ தர்ம:" என்னும் வழியைக் கடைப் பிடித்தவள்

---

* இதின் பொருள் கஜேந்திரன் முதலையால் இழுக்கப்பட்டபொழுது கண்ணை மூடிக்கொண்டு ஆதிமூலமே யென்று கதறினபொழுது தேவதைகள் எல்லாம் "நான் மூலம் இல்லை நான் இல்லை அத்தகையான் எங்களில் இல்லை" என்று சொல்லிக் கைவிட எந்த ஆதிமூலமான வஸ்து வந்து காப்பாற்றியதோ அந்த வஸ்துவானது நமக்கு மங்களத்தை கொடுக்கட்டும்.

இதற்கு சாம்யமாக* இச்சிறுமியின் விவாஹ ஸமயத்திற்காக கொண்டுவரப்பட்டிருந்த அநேகம் பக்ஷிஜாலங்†களையும் இதர மிருகங்களையும் மாணமடையாது தப்புவிக்கும் பொருட்டு நடுராத்திரியில் அவைகளைக் கட்டவிழ்த்து ஓடும்படி செய்து, தக்ஷணமே தானும், தான் செய்த காரியத்தால் வரும் கேட்டைத் தப்பிக்கொள்ள காட்டில் ஒளித்துக்கொண்டாள். இவ்விதமே வெகு காலமாக கந்த மூல பலாதிகளையே புசித்துக் கொண்டு காட்டிலேயே ஜீவித்து வந்தாள். நாளடைவில் அவளுடைய பக்தி மென்மேலும் விருத்தியடைய அவ்வுத்தமி பெரியோர்களையும், பகவதடியார்களையுமே இடைவிடாது பூஜிக்கத் தொடங்கினாள். அதாவது பெரியோர்களுக்கு அக்னி வளர்ப்பதற்காகக் காடுகளிலிருந்து கட்டை முதலியன கொணர்ந்தும், தர்ப்பை முதலிய காட்டுப் புல்களினால் ஆசனங்கள் செய்தும், அவர்கள் ஆசிரமங்களைச் சுற்றிலுமுள்ளவும், வெளியே போவதுமான, மார்க்கங்களைச் சுத்திசெய்வதும், அவைகளிலுள்ள, கல் முதலிய இடையூறு செய்யக் கூடியவைகளை அப்பெரியோர்கள் பொற்பாதங்களில் படாது அப்புறப் படுத்தியும், அவர்கள் உடுத்தக்கூடிய மரவுரி‡ முதலிய ஆடைகளைக் கொணர்வதும் செய்து வந்தாள். இச்செயல்களெல்லாம், அப்பெரியோர்கள் மனத்தை மிகவும் திருப்தியடையச்செய்தனவாகையால், அவ்வுத்தமி வசித்த இடத்திற்கு சமீபத்தில் ஓர் ஆசிரமத்தில் வசித்த மதங்க மஹரிஷி யென்பவர் இவ்வரிய செய்கைகளைச் செய்த பக்தன் யாரென்று காண விருப்பங்கொண்டு ஒரு நாள் அவ்வணங்கை§ச் சந்திக்கலானார். அச்சமயம் அப்பெண்

---

* சாம்யம்=உதாஹரணம்; ஒப்புமை

† ஜாலம்=கூட்டம்.

‡ மரவுரி=மரப்பட்டையாற் செய்யப்பட்ட ஓர்வித ஆடை அல்லது வஸ்திரம்

§ அணங்கு=பெண்மணி.

மணி, தானிதுவரை ஒருவருமறியாது செய்து வந்த காரியங்கள், பெரியோர்கள் மனதை எவ்விதம் புண்படுத்துமோவென்று பயந்தும், தான் நீச*ஜாதியில் பிறந்திருந்தும் இவ்விதம், பெரியோர்களுக்கு பணிவிடை செய்யப் புகுந்தது தவறென்றும் துக்கமடைந்து தன் சரீரம் ஆத்தியந்தம்† நடுநடுங்க, கண்களில் நீர் தாரை தாரையாகவோட அம்மஹரிஷியின் கால்களில் விழுந்து சரணாகதி யடைந்து தான் தெரியாது செய்த காரியங்களுக்காக மன்னிக்க வேண்டுமாய் மிகுந்த தீனஸ்வரத்துடன்‡ பிரார்த்திக்கலானாள். ஆனால் அம்மஹரிஷி இவ்வுத்தமியின் நிஜ பக்தியைக் கண்டு வியந்து§ அவளுக்கு சில உத்தம உபதேசங்களைச் செய்து, தன் சிஷ்ய கோடிகளுக்குள் முதன்மையாகச் செய்வித்து தானும் மிகுந்த வன்பும் மரியாதையுமாக நடத்திவந்தார். மஹரிஷியின் இச்செய்கை, இதர$ சிஷ்யர்களுக்கு மிகுந்த துக்கத்தை யுண்டு பண்ண அவர்களெல்லோரும் ஒன்று கூடி இம்மஹான் ஓர் நீச ஸ்திரீக்கு உபதேசம் செய்த நிமித்தம் சாஸ்திர விரோதமாய் நடந்தாரென்றும் ஆகையால் அவர் இனியும் தங்களால் அபிமானிக்க||த் தகுந்தவரல்லரென்றும் தீர்மானித்தார்கள். ஆனால் அம்மஹரிஷி தம் சிஷ்யர்களின் கோபத்தை கொஞ்சமும் கருதாது அப்பெண்மணியை முன்போலவே நடத்தி வந்தார். இவ்விதமே வெகுகாலம் கழிந்தது பிறகு இம்மஹரிஷி ஸ்தூல சரீரத்தை விட்டு முக்தியை யடையுங் காலஞ் சமீபிக்க, இவ்வம்மணி தானும் தனது குருவுடன் போக எவ்விதத்திலும் முயன்றாள். ஆனால் மதங்க மஹரிஷியோ அவளைப்

---

* நீச = கீழ்ப்பட்ட

† ஆத்தியந்தம் = முழுமையும், பூராவும்

‡ தீனஸ்வரம் = தாழ்மையான சப்தம்

§ வியந்து = மகிழ்ந்து, சந்தோஷமடைந்து

$ இதர = மற்றுமுள்ள

|| அபிமானிக்க = அன்பு செலுத்த

பலவிதத்திலும் சமாதானப்படுத்தி, அவதார புருஷர்களாகிய ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும், அவளுக்கு நேரிலேயே தரிசனம் கொடுத்து அவளை மோக்ஷத்துக்கு அனுப்பப் போகிறார்களென்றும் அவ்விரு மஹா புருஷர்களும் சீக்கிரமே இவ்வடவி* வருவார்களென்றும் ஆசீர்வதித்து முக்தி லோகம் சென்றார்.

இவ்வம்மணியும் அவ்விருவர்கள் வரவை அன்புடன் எதிர் பார்த்துக்கொண்டு முன்போலவே பெரியோர்களுக்குக் கவனமாய் பணிவிடை செய்துவந்தாள். இவ்விதமிருக்க ஒரு நாள் அவ்வி வர்களின் வரவையே தியாநஞ் செய்து கொண்டிருந்த நிமித்தம வழக்கம்போல் வெளியே போக கொஞ்சம் தாமஸமாக, வழியில் ஓர் மஹான் அவளைச் சந்திக்க நேரிட்டு, அவ்விதம் சண்டாள ஜாதியில் பிறந்த அவளை சமீபித்த பாபத்தை விலக்கிக்கொள்ள மறுபடியும் நதியில் ஸ்நாநம் செய்யப் புறப்பட்டார். அப்பொழுது அவ்வம்மணிக்கு நேரிட்ட அவமானத்தை சகியாதும் அம்மஹானுக்கு அவளுடைய வாஸ்தவ நிலைமை தெரியும் பொருட்டும் பகவான் அந்நதி ஜலம் முழுமையும் ரக்தமயமாக்கி, அவள் மஹாவுத்தமி என்ற அசரீர வாக்கையும் அநுக்கிரஹித்துச் சென்றனர். கடைசியாக ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் வருங்காலம் சமீபிக்க, இவ்வம்மணி அவர்களை எதிர்கொண்டழைத்து வந்து தான வெகு காலங்களாக சேகரித்து வைத்திருக்கும் கனிவர்க்கங்களை அவர்கள் முன் வைத்து அவர்களும் உடனே வங்கீகாரம் செய்துகொள்ள அவ்வம்மணி அடங்காத வானந்த சாகரத்தில் மூழ்கி நின்றாள்.

பிறகு பகவானும், அவள் நீச ஜாதியில் பிறந்திருந்தாலும், பக்தியின் விசேஷத்தால் அவளடைந்திருக்கு முந்

* அடவீ=அரண்யம் காடு

நத நிலைமையை யவளுக்கு விவரமாக எடுத்துக் காட்டி, பக்தி 9 விதம் என்றும். அதில் அவ்வம்மணி அடைந்த மார்க்கமே உயர்வானதென்றும் சொல்லி அவளை திவ்விய சரீரமடையச் செய்து மோக்ஷங்கொடுத்தார்.

தத்வ:—ஹே! ஞான சத்குருவே. இவ்வபூர்வ சரித்திரத்தையும், சபரீ யென்னும் கன்யாரத்தினத்தின் உத்தமோத்தம குணங்களையும் விசேஷ பக்தியையும் பற்றி தெளிவுறக் கேட்டோம். பகவான் சொல்லிய 9 வித பக்தியையும் கருணையுடன் திருவாய் மலர்ந்தருள மிக்க வணக்கத்துடன் பிரார்த்திக்கிறோம்.

யோகி:—நல்லது கேளுங்கள். பக்தியின் 9 வித விபாகங்களாவன:—

1. பெரியோர்களுக்கும், ஸாதுக்களுக்கும் பணிவிடை செய்வதே முதன்மையானது.

2. மத சம்பந்தமானவும், சாஸ்திர சம்பந்தமானவுமான காரியங்களிலுள்ள பக்தியே இரண்டாவது.

3. ஆசாரியர்களிடத்திலுள்ள உண்மையான பக்தியும் ஆவலுமே—மூன்றாவது.

4. தன்னிடத்திலுள்ள தெய்வீகத் தன்மையை சுயநலம் கருதாது பரோபகார நிமித்தம் விருத்தி செய்தலே நான்காவது.

5. வேதங்களில் சொல்லிய வண்ணம் பகவத்ஸ்தோத்திரங்களை பக்தியுடன் ஸ்துதித்தலே, ஐந்தாவது.

6. இந்திரியங்களைத் தன் வசமாக்கி, சாந்தியும், தயையும், அடைந்து பெரியோர்களிடத்தும் நல்லவர்களிடத்தும் அன்பு பாராட்டுதலே, ஆறாவது.

7. இப்பிரபஞ்சம் ஈசுவராம்ச பூதமென்றும் ஈசுவரனை யாராதிப்பது போலவே, துறவிகளையும் ஆராதிக்க வேண்டுமென்பதே—ஏழாவது.

8 திருப்தியும், புறங்கூறாமையுமே—எட்டாவது.

9 ஒழுக்கமும், நேர்மையும், ஈசுவரானுக் கிரஹம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும், சுக துக்கங்களால் சோர்வடையாமையுமே—ஒன்பதாவது.

ஹே சிஷ்யர்காள்! இப்பொழுது ஹேம கூடத்தில் ஒரு ஸாது ஸங்கம் நடக்கப் போகிறபடியால நான் அங்கு போகிறேன். வரும் வரை ஜாக்கிரதையா யிருக்கவும். தெரியுமா? உங்களுக்கு மங்களம் உண்டாகுக.

யோகி சுந்தரராஜம்.

---

## அஷ்டாங்க யோகம்.

---

அந்நெறி யிந்நெறி யென்னாதட் டாங்கத்
தன்னெறி சென்றச மாதியி லேநின்மி
லன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகாலம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே.

திருமந்திரம்.

---

# ஜகத்குரு ஸ்தோத்ரம்.

திருப்புகழ். எண்கலைவண்ணம். ஆதிதாளம்

தனத் தனத் தன தன தானாதன தனதானா.

நிலத் தடத் துறு பல சாரார் கவி
மதத் துயிர் தரு மறை போனே எம
தகத் தடத் திருள் களை வாயே அதி லுறைவாயே.
நிலைத்தமெய்ப்புக லருளாளா மதி
கலக் குழுப் பல வித வேதா கமர்
பலர்க்குமப் பொருள்பகர் வோனேசமர் களைவோனே
புலத் தெதிர் படு மறி வாலே யொரு
பொருட் டுணிந் துரை புவி சாரா துனை
மனத் தகத் திட வரு வாயே அருள் புரிவாயே
புடைத் தெழுந் திரை கட லாடை கொளு
நிலத்தொடுஞ் சுரர் முத லானோர் பணி
குணத் தமர் பெருங் குரு வானா யருட் பெருமானாய்
நலத் துறும் உயர் குணமாரு திமம்
நிகர்த்ததெள்ளிய மன தாலே நித
மிகுத் தவன் பொடு மற வாமே யுனை யுறவோமே
நகைத் துமெல் லென சிறு வாயா லசை
மலர்க் கரத் தொடு மகிழ் வாலே வரு
மகற் கிடர் தர நினை யோமே தின மறவாமே
மலைத் தலைப் புறு மதி போலே திகழ்
மனத் தகத் துறு பெரி யோனே புகழ்
குணத் திறத் தகைமை நீயே என இசைவோமே
வளர் பிறைத் தனி மதி போலே குண
நலத் தொடும் வளர் குழு வானோ முன
பணிச் செயும் ஒரு வழியாலேகுரு பெருமானே

அ. நம்மாழ்வார்,

உபாத்தியாயர், தியஸாபிகல் ஸ்கூல், சொ. குப்பம்.

## சமாசாரம்.

கோட்டயம் "கௌதம லாட்ஜின்" ஏற்பாட்டின் மேல் திருவனந்தபுரம் மஹா ராஜா 'காலேஜ்' உதவி அத்யாபகரும் எம். ஏ விருதுபெற்ற வருமான பிரஹ்மஸ்ரீ ஆர் ஸ்ரீனிவாச ஐயர் அவர்கள் செப்டம்பர் 8, 9, 10, 11வ களில் நான்கு உபந்யாசங்கள் செய்தார்கள் "ஆத்யாத்மிகவாழ்வு" "தேஹாத்மவாதம்" என்ற விஷயங்களைப்பற்றி ஆங்கிலத்தில் முன்னிரண்டு நாட்களிலும், "இவ்வுலகத்தில் தற்கால மாறுபாடுகளும் வரப்போகும் லோககுருவும்" "பிரஹ்மக்ஞான சபை" என்னும் விஷயங்களைப் பற்றியும் தமிழில் பின்னிரண்டு நாட்களிலும் உபந்யாசங்கள் நிகழ்ந்தன உபந்யாசங்களைக் கேட்ட அனைவரும் பெரும்பயனடைந்தார்கள்.

தஞ்சாவூர் ஜில்லா பிரஹ்மக்ஞான கான்பெரன்ஸ் செப்டம்டர் 23, 24 தேதிகளில் நாகப்பட்டணத்தில் நடந்தது. மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மை சென்னையிலிருந்து வந்து அக்கிராசனபதியாயமர்ந்து 23வ காலையில பிரஹ்மக்ஞான சபையைப் பற்றி ஒரு உபந்யாசமும் 24வ காலையில் கல்வியைப்பற்றி ஒரு உபந்யாசமும் செய்தார்கள்.

மதுரைப் பிரஹ்மக்ஞான சபையின் அங்கத்தினர் பென்ஷன் தாசில்தார் கே. யஸ். இராமசந்திர ஐயர் இப்பொழுது சில மாசமாக புதுக்கோட்டை சமஸ்தானம் ஆலங்குடியிலிருந்து வருவதில் அடியிற் கண்டபடி பொது நன்மைக் குழைப்பதைக் கேள்விப்பட சந்தோஷிக்கிறோம்.

(a) அந்த ஊர்க்காரர்களில் பொது ஜன உபகார சிந்தனையுள்ள சிலரின் உதவியின்மேல், பகலில் வேலை செய்து பிழைக்கும் கள்ளர்கள் முதலிய சாதியார்க்கு இராப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தி நடத்திவந்தார். சமீபத்தில அதை சமஸ்தான கல்வி இலாகா அதிகாரத்துக்குள் எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆரம்ப முதலே கல்வி யிலாகா அதிகாரிகள் முக்கியமாய் கல்வி யிலாகா சூப்பிரண்டெண்டு அவர்கள் இவருக்கு இது விஷயத்தில் உதவிபுரிந்து வந்ததாக அறிய ஆனந்திக்கிறோம்

(b) ஆலங்குடியிலுள்ள சமஸ்தான லோயர் செகண்டரி பள்ளிக்கூடத்தில் 1, 2, 3-வது பாரத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு வாரம் இரண்டு முறை மத சம்பந்தமாகவும் நன்னடத்தை சம்பந்தமாகவும் கல்வி கற்பித்தலில் இப்பள்ளிக்கூடம் தலைமை உபாத்தியாயர் முதலியோர் இது விஷயத்தில் அவருக்கு வேண்டிய உதவி செய்து வருவதாகத் தெரிந்து சந்தோஷிக்கிறோம்.

c) அடிக்கடி ஆலங்குடி ஸ்ரீமார்த்தாண்ட வாசக சாலை புஸ்தகசாலைகளில் பல விஷயங்களைப்பற்றி உபந்யாசஞ் செய்து வருதல்.

(d) புதுக்கோட்டையிலுள்ள (Central Jail) சிறைச்சாலையில் போய் ஹிதோபதேசம் செய்து வருதல்.

(e) புதுக்கோட்டைக்குப் போன காலத்தில் பள்ளிப் பிள்ளைகளுக்கு மதசம்பந்தமான விஷயங்களில் புத்திமதி கூறுதல்.

(d) மத சம்பந்தமான கல்வி, ஸமஸ்தானப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணாக்கர்களுக்கு, கற்பிக்கவேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமாய் டர்பார் அவர்களைக் கேட்டு நடபடிக்கை நடத்தி வருவதாகத் தெரிய திருப்திகரமாயிருக்கிறது. இது விஷயத்தில் இவர்கள் எடுக்கும் முயற்சி கைகூடுமென்று நம்புகிறோம். அவ்விதம் கடவுள் துணை செய்வாராக

# புத்தகவரவு.

---

**தியானக்கிரம விஷயம்**:—தியானத்தின் பிரயோஜனமென்னவெனில், பிரதி மனுஷ்யனும் அவனவன் திநசரி நடபடிக்கைகளில் ஸத்யத்தையும் தர்மத்தையும் சுகத்தையுமே கடைப்பிடிக்கும் திறனைப் பெறுமாறு, சஞ்சலமுள்ள நம்மனதை ஓர் குறித்த வகையிற் பழக்குதலேயாம். அதற்கு இலக்குவாக "ஸற்குரு சரணங்களில்" என்ற அரிய கிரந்தத்தின் விஷயங்கள் யாவும் மாதத்திற்கொரு சிந்தனையாகவும்.வாரந்தோறும அப்பியஸிக்கத்தக்க ஓரோர்நற்சிந்தனையாகவும், பிரதிதிநமும் நமது அநுஷ்டானத்தை நேர்மைப்படுத்தக்கூடிய ஓரோர் நற்சிந்தனையாகவும் பகுக்கப்பட்டு, தியானக்கிரமத்திற்கு அநுகூலமாய் பிரசுரமாகியிருக்கின்றன. எல்லாரும் வாங்கிப் படித்து நற்பயன்பெறுமாறு விலை சொற்பமாக 4 அணா வீதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பென்ஷன் தாசில்தார் மகா-ா-ா-ஸ்ரீ கே. யஸ். ராமச்சந்திர ஐயரவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. (9—9—16 நவபாரதீ, எனும் 'நியூ இந்தியா" ஆங்கில தினசரி பத்திரிகையில், சிலாகித்தெழுதப்பட்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பார்க்க) வேண்டுவோர் மதுரை பிரஹ்மக்ஞான மந்திரம் B. S. ராமசுப்பையருக்கு எழுதி தபாற்கூலி யுள்பட 4½ அணா ஸ்டாம்பு அனுப்பியாவது அல்லது வீ. பி. மூலமாவது பெற்றுக்கொள்ளலாம்.

---

**தேவாசுர யுத்தம்**:-இது பாரத்வாஜ ஏ. சுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்டது. தீர்க்க தர்சனம்-தீர்க்க தர்சிகள்-யுத்த விஷயமான 20 மிக அத்புத தீர்க்கதர்சனங்கள்-ஜிப்ஸி வகுப்பார்-ஜர்மானிய ராஜ குடும்பம்-ஓர் கையற்ற ஜர்மன் சக்ரவர்த்தி-பேர்லின் நகர்-கத்தோலிக் சந்யாஸிகள்-நெபோலியன்-2 போப்களின் ஏககால மரணம்-இரத்த வெள்ளம்-கதிரவன் மறைபடுதல்-கழுகு ராஜ சின்னம்-ஓர் விசித்ரக்கனவு-செயின்ட் ஸோபையா எனும் தேவாலய ரஹஸ்யம்-அர்த்த சந்த்ரன்-ஸ்ரீமான் ஸின்னட்-கவுண்ட் லியோ டால்ஸ்டாய்-ஸ்ரீமதி தீப்ஸ்-ஸிபில்லா-ஆஸ்திரியா இளவரசர்-ககனசஞ்சாரம்-சகுனபலாதிகள்-ஓர் அரசன் தலைதறியுண்டது-பிராணிகளின் முன்னறிவு பிஸ்மார்க் பிரபுவின் சிலையில் சதனம்-பெல்ஜியத்து கண்டாமணி-ஏரிநீர் இரத்தமாக மாறுதல்-மேகங்களில் யுத்தக்குறிகள்-வராஹமிஹிரர்-அசரீர வாக்கு-தேவர்கள் வானில் தோன்றல்-க்ரஹண தூமகேதுகள்-4 பிரபல ஜ்யோதிஷரது அபிப்ராயங்கள்-சக்ரவர்த்திகளின் ஜாதக பல விசேஷங்கள்-ஜர்மனியின் ரஹஸ்ய நோக்கம்-பிஸமார்க்கின் மந்த்ரோச்சாடனங்கள்-ஜர்மானியரின் அழிம்புகள்-தேவாசுர யுத்தம்-யுத்தமுடிவு. எவ்விதம்? எப்போது?—இவைகள் இதிற் கூறப்பட்டுள்ளன. இப்புத்தகம் கிடைக்கும் இடங்கள்.

1. இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்
   புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.
2. பாரத்வாஜ
   ப்ருஹ்மக்ஞான மந்திரம், மதுரை.

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

## கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

### விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

### குணமில்லாவிட்டால்

## ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும்!!!



நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனேகரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, குறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும.

இந்த லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொ வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | ரூ அ பை |
|---|---|
| விலை பாக்கெட் 1-க்கு ரூ | 0—8—0 |
| டசன் 1-க்கு ரூ | 5—0—0 |

விலாசம்:—வி. ஏ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

நக்ஷத்ரம் பிரகாசிக்கிறது!

லோககுரு வருகிறார்!

பரமாசார்யர் வருகிறார்!

ஜகத்குரு வருகிறார்,!

---

என்று பகிரங்கப் படுத்துங்கள், உதயதிசை நக்ஷத்திர சங்கத்தார் இதை அழகாய்க் காரண காரியங்களுடன் எடுத்துரைக்கிறார்கள். அதன மூலமாய் ஜனங்கள் எல்லோருக்கும், எம்மதத்தாருக்கும், எச்சாதியாருக்கும் நிஜ பக்தியை ஊட்டுகின்றனர். இது மிகவும் முக்கியம். இத்தருணம் இது விஷயமாய் உழைக்கத் தவறாதீர்கள். பெரும் பாக்கியம்! எவரும் உழைக்கலாம்.

உதயதிசை நக்ஷத்ர சங்கம், நக்ஷத்ர தூதர்களின் சங்கம் இவ்விரண்டைப் பற்றிய விவரங்களும், "லோக குருக்கள்" அவதரிப்பதைப் பற்றிய இரகசியங்களும் அடங்கிய துண்டு பத்திரிகைகள் எமது வசம் தயாராயுள்ளன. பின்வரும் விலாசத்திற்கு நாலணா அனுப்புக. வகைக்குப் பத்து வீதம் ஐந்து வகைக்கு ஐம்பது துண்டுப் பத்திரிகைகள் தங்கட்கனுப்பப்படும். தாங்களும் வாசித்து, வேறு பத்து நண்பர்களுக்கும் பத்திரிகைகளைக் கொடுத்து இந்நற்செய்தியைப் பரப்பி "சேரவாரும் ஜகத்தீரே" என்று இராமலிங்கஸ்வாமிகள் கூறியபடி கூவுங்கள். இதுவே உண்மைப் பக்தி.

B. S. ராமசுப்பையர்.

பிரஹ்மக்ஞான மந்திரம், மதுரை.

---

## நமது பிரஹ்மக்ஞான ஸபைக்கு ஆதார பூதர்களான தேவாபி, மரு குருநாதர் ஸ்தோத்திரம்.

இது திருநெல்வேலிப் பாலம், தக்ஷிணாமூர்த்தி மடம்

**M. வேதநாயகஸ்வாமிகள், F. T. S.**

அவர்களால் ஷை குருநாதர்களின் அருட் பிரவாகத்தை முன்னிட்டு பாடப்பட்ட ஸ்தோத்ரங்கள்.

நமது மெம்பர் ஒவ்வொருவரும் பாராயணம் செய்யத் தக்கது. புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 1 வேண்டுவோர் தபாற் கூலி உள்பட அடியிற்கண்ட விலாசத்திற்கு $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், பூர்ணசந்திரோதயம், மதுரை.